Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 42 — No. 12

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய மார்கழி 1969 டிசம்பர் | இதழ் 12

உள்ளுறை பக்கம்

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாசப் பொதுக்கூட்ட அறிவிப்பு.

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 20—12—69 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாச ஆண்டு அறிக்கையையும் இவ்வாண்டு வரவு செலவுக் கணக்கையும் ஒப்புக்கொள்ள சமாசப் பொதுக்கூட்டம் நிகழும். அக்கூட்டத்திற்கு உறுப்பினர் நிறைவெண் இல்லாவிட்டால் மேற்குறித்த பொருள்கள் பற்றி ஒப்புக்கொள்ள அவ்விடத்திலேயே மறுநாள் 21—12—69 ஞாயிற்றுக்கிழமை காலை அதேநேரத்தில் சமாச விதிகளின்படி வருபவர்களைக் கொண்டு அக் கூட்டம் நடத்தப்பெறும். பொது உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர். செயலாளர்.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர் தங்கள் புத்தாண்டுச் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தினையும் 31-12-69 க்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். வி. பி. பி. யில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 காசுகள் வீணாக அதிகம் செலுத்தவேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப் பெயர், 2. சந்தா எண் 3. தெளிவான முகவரி, 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை அரசியலார் இசைவு பெற்றுத் தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கின்றோம். மலேயா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. சிவநேசன் அவர்களிடம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :-

செயலாளர்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழமாட வீதி, சென்னை-4.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினராக திரு. சு. பாலகிருட்டினன் அவர்கள் (ஆசிரியர், நொச்சிக்குட்டை அஞ்சல், புன்செய்ப் புளியம்பட்டி வழி, கோவை மாவட்டம்.) சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905—பதிவு - 1915)

64ஆம் ஆண்டு விழா, காஞ்சிபுரம்

அழைப்பும் அறிவிப்பும்

தாயவன்காண் உலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா வென்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணுளோர்க்கும்
சேயவன்காண் நினைவார்க்குச் சித்தம் ஆரத்
திருவடியே உள்கிநினைந் தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காண்அவனென் எண்ணத் தானே.—அப்பர்

அன்புடையீர்,

சைவ சித்தாத்த மகா சமாஜத்தின் 64ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பொதுக்கூட்டமும், அதன் அங்கமாகச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், 27, 28—12—69 ஆகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சபேசர் திருக்கோயிலில் பிற்காணும் நிகழ்ச்சி நிரலில் கண்டாங்கு முறைப்படி நிகழும்.

சென்னை அரசாங்க முன்னாள் துணைச்செயலாளர் ராவ்சாகிபு - திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ. அவர்கள் சைவர் மாநாட்டிற்கும், தருமபுரம் - வித்து வான் - திருமதி. ப. நீலா அம்மையார் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், மகாவித்துவான் - திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகிப்பார்கள்.

சித்தாந்த சைவம் பற்றி அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். மாநாட்டு நிகழ்ச்சிகளின்போது இடை இடையே திருமுறை ஓதப்பெறும்.

அன்பர்கள் அனைவரும் உறுப்பினரும் வந்து கேட்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குச் சமாஜ உறுப் பினர்கள் அனைவரும் வருமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

சமாஜத்தினர் :

தலைவர் : வித்துவான் - கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

துணைத்தலைவர்கள் :

ராவ்பகதூர் - க. அரங்கசாமி முதலியார், பி.ஏ.

கே. இ. அருணசல முதலியார், எம்.ஏ., பி.காம்.

செயலாளர் : மு. நாராயணசாமி முதலியார்.

வரவேற்புக் குழுவினர் :

ஆதரவாளர்கள் :

திருவாளர்கள் :

வி. என். பெருமாள் நாயுடு
ஏ. வி. முனுசாமி முதலியார்
எஸ். எல்லப்ப முதலியார்
அ. எ. த. அ. லோகநாத முதலியார்
ந. க. கணபதி முதலியார்
டி. கே. சிங்காரவேலு முதலியார்
ஏ. பி. கண்ணபிரான் முதலியார்
கே. டி. எஸ். மணி

தலைவர் : சௌகார் - எஸ். ஆர். டி. சம்பந்த முதலியார்

துணைத்தலைவர்கள் :

வி. திருஞானசம்பந்த முதலியார்
வா. கி. ரா. கோவிந்தராஜ முதலியார்
திருமதி. ஆர். கோவிந்தராஜன், எம்.ஏ., எல்.டி.

செயலாளர் - பொருளாளர் :

க. வச்சிரவேலு முதலியார், பி.ஏ., எல்.டி.

துணைச் செயலாளர்கள் :

நா. ப. தணிகை அரசு
து. சே. கந்தசாமி முதலியார்
சி. ஈ. எஸ். பெருமாள்

துணைப் பொருளாளர் :

திருவாளர்கள் :

அ. இராமசாமி

உறுப்பினர்கள் :

ஏ. எல்லப்ப நாயகர். எஸ். ஜி. பெருமாள்
ஏ. டி. நாகராஜ ஐயர். ஜி. திருவேங்கடம்
சு. அருணாசல முதலியார்
எம். முனிரத்தின முதலியார்
ஏ. ஏகாம்பர முதலியார்
ஜி. தேப்பெருமாள் முதலியார்
எஸ். இராமச்சந்திர முதலியார்
எம். வி. கிருஷ்ணசாமி முதலியார்
ஏ. கி. கோவிந்தராஜ முதலியார்
எம். எம். தணிகைமலை முதலியார்
ஆக்கூர் சண்முக முதலியார்
கே. முத்துசாமி முதலியார்
குழந்தைவேல் முதலியார்
சி. பக்கிரிசாமி முதலியார் பி.ஏ.,எல்.டி.
எஸ். ஆறுமுக நாடார்
வி. ஆர். கோபாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.
எம். வேலாயுத முதலியார்
எம. பி. இராதாகிருஷ்ணன்

———

நிகழ்ச்சி நிரல்

இடம்: ஸ்ரீ கச்சபேசர் திருக்கோவில்

(27—12—'69) சனிக்கிழமை

காலை 6-30 மணி: காஞ்சிபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் திருமடத்திலிருந்து தலைவர்களை ஊர்வலமாக அழைத்து வருதல்.

,, 7 மணி: ஸ்ரீ ஏகாம்பரேசுவரர், ஸ்ரீ கச்சபேசுவரர் ஆலயங்களில் வழிபாடு.

காலை 8 முதல் 1 மணி வரை—சைவர் மாநாடு

இறை வணக்கம்.

கொடியேற்றம்: திரு. A. N. நடராஜன், ஐ. ஏ. எஸ்., மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்.

வரவேற்புரை: சௌகார் - திரு. எஸ். ஆர். டி. சம்பந்த முதலியார்.

திறப்புரை: தவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

வாழ்த்துரை: தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.

படத்திறப்பு: டாக்டர் - மா. இராசமாணிக்கனார், எம்.ஏ., எல்.டி., எம்.ஓ.எல்., பிஎச்.டி. திருவுருவப்படம் — திரு. கீ. இராமலிங்கனார், எம்.ஏ.

ஆண்டு அறிக்கை, செய்திகள் படித்தல்: திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம். ஏ.

தலைமையுரை: ராவ்சாகிபு - நல். முருகேச முதலியார், பி.ஏ.

சொற்பொழிவு: வித்துவான் - க. வெள்ளைவாரணனார்

—நெய்யின் உறுசுவை

பகல் 2-30 முதல் 4 மணி வரை

சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம்,

சமாஜ அலுவலர்கள் தேர்வு முதலியன

மாலை 5 முதல் 8 மணி வரை—சைவர் மாநாடு

இறை வணக்கம், தலைவர் முன்னுரை

சொற்பொழிவுகள் :

1 திரு. சண்முகம், மாவட்ட வருவாய் அலுவலர்
—அறவுரை

2. திரு. மு. அருணாசலம், எம். ஏ., ஆசிரியர், "சித்தாந்தம்" —திருப்பள்ளியெழுச்சி

3. திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., ஆசிரியர், திருக்கோயில் —அருளியல் தலைவன்

4. வித்துவான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
—தீங்கனி

5. பேராசிரியர்-வித்துவான் - பாலூர் - கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.
—அப்பாறும் அடிசார்ந்தார்

இரவு 8-30 மணி முதல்

திரு. வே. சுந்தரமூர்த்தி பாரதியார்
—மெய்கண்டார் காலட்சேபம்

(28—12—'69) ஞாயிற்றுக்கிழமை

காலை 6-30 மணி : ஸ்ரீ காமாட்சி அம்மை திருக்கோயில் வழிபாடு

காலை 8 முதல் 12 மணி வரை—மங்கையர் மாநாடு

இறை வணக்கம்.

தோடக்க உரை : டாக்டர் - திருமதி. தாரா நடராஜன், எம்.பி., பி.எஸ்., டி.சி.எச்.

தலைமையுரை: வித்துவான்-திருமதி. ப. நீலா அம்மையார்

சொற்பொழிவுகள் :

1. திருமதி. புனிதவதி இளங்கோவன், பி.ஏ.,பி.டி.
—சுந்தரர் எடுப்பும் சேக்கிழார் தொடுப்பும்

2. செல்வி. வெ. மருதவாணி, பி.ஏ., பி.டி.
—நோயும் மருந்தும்

3. திருமதி. ஜயகுமாரி பாஸ்கரன்
—ஆளாவது எப்படியோ ?

பிற்பகல் 2 முதல் 4 மணி வரை

David Jesse Shawver, Wisconsin University, America
—Conception of God in Saiva Siddhanta

திரு. வே. மு. பிரமேச முதலியார்—விநாயகர் மாண்பு

மாலை 4 முதல் 9 மணி வரை—இளைஞர் மாநாடு

இறை வணக்கம்.

வரவேற்புரை : திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.

தோடக்க உரை : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் - திரு. கே. வி. சுப்பையா அவர்கள்

வாழ்த்துரை : இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் - கே. எஸ். நரசிம்ம முதலியார், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.

தலைமைப் பேருரை : மகாவித்துவான் - திரு. சி. அருணை வடிவேலு முதலியார்

சொற்பொழிவுகள் :

1. திரு. மா. வெங்கடேசன் —திருவருட்பயன்
2. வித்துவான் - அம்பை. இரா. சங்கரனார் —திருமூலர் சொல்
3. வித்துவான் - பு. மா. ஜயசெந்தில் நாதன் —சாக்கிய நாயனார்
4. சைவச் செங்கதிர் - வித்துவான் - இராச. செல்வக் கணபதி —கற்காவியம்
5. ஔவை. து. நடராசன், எம்.ஏ., எம்.லிட். —அருள்நெறி

நன்றி கூறல். வாழ்த்து.

குறிப்பு :—(1) மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும். சமாஜ உறுப்பினர் கட்டணமும், ஆங்கில முத்திங்கள் இதழ் கட்டணமும் மாநாட்டில் செலுத்தலாம். (2) சமாஜ உறுப்பினர்களுக்கு உண்டி, உறையுள் வசதிகள் செய்து தரப்பெறும். (3) முன்னரே தங்கள் வரவினை வரவேற்புக் குழுச் செயலாளர், திரு. க. வச்சிரவேலு முதலியார், பி.ஏ., எல்.டி. அவர்கள், 22, அனந்தோசி பண்டிதர் தெரு, பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம், செங்கல் பட்டு மாவட்டம் என்ற முகவரிக்குத் தெரிவிக்க. (4) உறுப்பினர்கள் தங்குமிடம் இராஜகோபால் கலியாண மண்டபம், நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம்.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 42	சௌமிய ஞூ மார்கழி 1969 டிசம்பர்	இதழ் 12

சைவ நூல்களில் அடிவரவு

(ஆசிரியர்)

அடிவரவு கூறுதல் என்பது வைணவ இலக்கியங்களில் பெரிதும் பயில்கின்ற ஒரு மரபு. நாலாயிரப் பிரபந்தம் மட்டும் அன்றி, வேறு பல வைணவசமய நூல்களிலும் இந்த மரபைக் காணலாம். உதாரணம் மணவாள மாமுனி நூல்கள். யாப்பருங்கலக் காரிகை ஆசிரியரான அமிதசாகரர், இயல்தோறும் காரிகைச் செய்யுட்களின் முதல் நினைப்பாக ஒரு காரிகை பாடிச் சேர்த்திருக்கிறார். உரை செய்த குணசாகரரும் அதேபோல, தாம் காட்டிய உதாரணச் செய்யுட்களை முதல் நினைப்பாகத் தொகுத்து இயல்தோறும் ஒரு கட்டளைக்கலித்துறை சேர்த்திருக்கிறார். இத்தகைய ஒருமரபு பொதுவாகச் சைவ நூல்களில் இல்லை.

எனினும், பிற்காலத்தில், இன்ன இன்ன தொடக்கமுடைய பாடல்கள் இன்ன இன்ன கருத்தை விளக்குவன என்று சொல்லும் முறை எழுந்திருக்கிறது. 17-ஆம் நூற்றாண்டில் தசகாரியம் பாடிய ஈசான தேசிகர் என்னும் சுவாமி நாத தேசிகர் இந்த நூலுள் சிவஞான போதம் பன்னிரு சூத்திரக் கருத்துக்களையும், ஓரிடத்தில் இந்த முறையில் சிவப்பிரகாசப் பாடல்களின் கருத்தை

விளக்க எடுத்துக் காட்டுகிறார். இது தசகாரியத்தில் 20-ஆம் பாடல்:

பலகலையு மெண்ணரிதும் பார்க்கிலருஞ் செறிந்திடுமே
மலநிலையால் வருமெண்ணே மருவியவுங் காட்டிடுமே
சொலவரிதாம் பன்னிறமுந் தன்னறிவுஞ் சொற்புகலும்
பிலமுளபொற் றீங்கண்டம் பேர்முதலாப் பன்னிரண்டே.

இங்கு சொல்லப்பட்ட பாடல்கள் பல கலை, (13) எண்ணரிது (19) செறிந்திடும் (52) எண்ண (60) மருவிய (63) காட்டிடும் (68) பன்னிறம் (69) தன்னறிவு (72) புகல் (76) பொன் (80) தீங்கு (93) அண்டம் (96) ஆக இப்பன்னிரண்டு தொடக்கமும் உடைய பாடல்கள் சிவப்பிரகாசத்துப் பன்னிரண்டு சூத்திரங்களின் தொடக்கமாகும்.*

இனி, பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய ஒரு பிரபந்தத்திற்கு இவ்வாறு அடிவரவு கூறுகின்ற பாடல் ஒன்றை நூலோடு சேர்த்தே பாடி அமைத்து இருப்பது இங்கு அறியத்தக்கது. இத்திரு முறையுள் 35-வது பிரபந்தம் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் என்பது. சண்பை யாவது சீகாழி. விருத்தம் என்று இங்கு சொல்வது கட்டளைக் கலித்துறையாகும். அக்காலத்தில் கட்டளைக் கலித்துறையால் இயன்ற நூலை விருத்தம் என்று சொல்லு கின்ற மரபு இருந்ததுபோலும். நான்காம் திருமுறையில், அப்பர் சுவாமிகள் பாடிய திருவிருத்தம் என்ற தலைப் புடைய பதிகங்கள்யாவும் கட்டளைக்கலித்துறையால் அமைந்தவை.

இனி நம்பி பாடிய இப்பிரபந்தம் 11 பாடல் உடை யது. முதல் பத்துப் பாடல்களும் 'சண்பையர் காவலன் சம்பந்தனே' என்ற முடிவை உடையன. சம்பந்தர் சமணரை அழிக்க அவதரித்தவர், உமாதேவியின் அருள் பெற்றவர், மருகலில் ஒரு வணிகப் பெண்ணுக்காக வணிக

---

*இதை உணராமையாற் போலும், திரு. தண்டபாணி தேசிகர் இந்தப் பாடலுக்குத் தொடர்பான பொருளையே முயன்று எழுதி விட்டார்.

னுக்கு விடம் தீர்த்தார், நனி பள்ளியில் பாலையை நெய்த லாக்கினார், சிவபிரான் அருள் அடைவதற்குத் தமிழால் வழிகண்டார், வையை யாற்றில் ஏடு எதிர் ஏற விட்டார், பெரு மணத்தில் மணம் புரிந்து கொண்டார் என்ற செய்தி களை இப்பாடல்கள் கூறுகின்றன.

பாலையை நெய்தல் ஆக்கப் பாடிய செய்தி ஓர் அபூர்வச் செய்தி; இதைத் திருத்தொண்டர் புராணம் குறிப்பிட வில்லை. அதற்குச் சில ஆண்டுகளின் பின்வந்த திருக் களிற்றுப்படியார் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட – பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நம்போல்
கரணங்கள் இல்லாமை காண்.

ஆனால் 11-ஆம் பாடல் இந்த முறையில் இல்லை. அதைக் கீழே காண்க:

பாலித்த கொங்கு குவளைகள்-
 ளம்பொழில் கீழ்ப்பரந்து
ஆலிப்ப ஆறதே றுங்கழ-
 னிச்சண்பை அந்தமுந்து
மேலிட்ட புண்டலைக் குஞ்சரத்
 தெண்டலைக் குந்தலைவன்
கோலிட்ட வாறு விடந்திளைக்-
 கும்அர வல்குலையே.

மற்றப்பாடல்கள் போல் இது 'சம்பந்தனே' என்று முடிய வில்லை. வேறு இதற்குப் பொருள் கொள்வதும் எளிதன்று. ஊன்றி ஆராய்ந்து பார்க்கும் போது, இப் பாடலானது முன்னுள்ள பத்துப்பாடல்களின் தொடக்கத் தையும் கொண்ட அடிவரவுப் பாடல் என்று தெரிகிறது. இப்பதிகத்தின் பத்துப் பாடல்களின் அடிவரவும் பின் வருமாறு: இவை முறையே பாலித்து, கொங்கு, குவளை, கள்ளம் பொழில், ஆறதேறும், அந்தமுந்தும், புண்டலைக் குஞ்சரம், எண்டலைக்கும் தலைவன், ஆறு, விடந்திளைக்கும் என்ற பத்துமாகும்.

இவ்வாறு நம்பி தம்முடைய நூல் ஒன்றில் அடிவரவு அமைத்து இருப்பது நமக்கு மிக்க வியப்பைத் தருகிறது.

"பொய்யடிமையில்லாத புலவர் திருவள்ளுவரே!"

(சுப. ஆவுடையப்ப தேசிகர், குன்றக்குடி.)

அண்டமுற நிமிர்ந்தாடும் அற்புதத் தனிக் கூத்தன் வண்டமிழில் அடியெடுத்துக் கொடுத்துச் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் வரும் ஏழாவது திருப் பாட்டின் முதலடியாக உள்ளது,

"பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்" என்ற தொடர். முதற்பாட்டின் முதல் அடி,

"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

என்பது இறைவன் வாக்கு. அதுமுதல் தொடர்ந்து ஒவ் வொரு அடியவரையும் பெயர் கூறி வருகின்ற சுந்தரர் பெருமான் ஏழாவது பாட்டின் முதலடியால்

"பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்"

என்று கூறுகிறார். மற்றும் தொடர்ந்து எழுவர் பெயர்கள் அப்பாட்டில் குறிக்கப் படுகின்றது. தொகையடியார்க் கெனப் பத்தாம் பாடல் முழுதும் பாடியிருக்கிறார். தனியடி யார் வரிசையில் வருகின்ற இப் பொய்யடிமை யில்லாத புலவர் யார் என்பது பற்றி ஏற்கனவே சிந்தாந்தத்தில் (பவ-ஆண்டு ஆவணி. 1934) வெளியாகியுள்ளது. அதன் பின்னர் இன்று வரை பொய்யடிமை யில்லாத புலவர் யார் என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய திருவந்தாதியால், "பொய்ம்மையிலாத் தமிழ்ச் சங்கமதிற் கபிலர், பரணர், நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல் புலவோர்" என்று குறிக்கின்றார். இக்கருத்தைச் சேக்கிழார் பெருமான் உடன்படாது சுந்தரர் கூறிய தனிப்பெயரையே உறுதி செய்வது போல் பாடுகின்றார்.

"செய்யுள் நிகழ் சொற்றெளிவும்
செவ்விய நூல்பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே
எனத்துணிந்து விளங்கி யொளிர்

மையணியும் கண்டத்தார்
மலரடிக்கே ஆளானர்
பொய்யடிமை யில்லாத புலவராம்
புகழ்மிக்கார்''

என்பது அவர்வாக்கு. பொய்யடிமை யில்லாத புலவரை மூன்று தொடர்களால் நமக்கு அடையாளம் காட்டுகிறார். 1. செய்யுள் நிகழ் சொல் தெளிவுடையவர். 2. செவ்விய நூல்பல நோக்குடையவர். 3. மெய்யுணர்வின் பயன், மையணியும் கண்டத்தான் மலரடிக்கு ஆளாவதே எனும் துணிவுடையவர்.

இம் மூன்று தொடர்களும் நம் தனித் தமிழ்மறை தந்த சான்றோராகிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரை நினைப் பூட்டுகின்றனவன்றோ. தாம் கண்ட உண்மைப் பொருளை ஐயத்திற் கிடமின்றி மக்கள் உணர்ந்து உய்வு பெற வேண்டும் என்பதற்காகப் பிறவாமை எனும் நோய் நீங்க வேண்டுவார் பற்றற்றான் பற்றினைப் பற்றுக எனக்கூறினார். சாரும் வழி இது என 'மெய்யுணர்தல்'' என்ற தனியதிகாரம் ஒன்று வகுத்து, அதில் பிறப்பிற்குக் காரணமாக உள்ள அறியாமை கெடச் சிறப்பென்னும் பேரின்பத்தை அருளும் செம்பொருளை உணர்வால் ஒன்றித்து நின்று இடைவிடாது கண்டு போற்றுவதே மெய்மையாகிய ஞானத்தின் பயனும் என்றார், ஞானத்திரளாய் நின்ற பெருமான் (வாலறிவன்) நல்லடியைப் போற்றுதல் கற்ற கல்வியின் பயனும் என்றும் தெளிவுறுத்தி அருளிய அப் பொய்யில் புலவனாகிய திருவள்ளுவரை பொய்யடிமை யில்லாத புலவர் எனக் கொள்ளுதல் சாலத்தகுமன்றோ.

இனிச் சுந்தரர், ''பொய்யடிமை யில்லாத புலவர் வள்ளுவர்'' என்றே கூறியிருக்கலாம் என்பார்க்கு, அப் பெயர் இனத்தால் வந்தது என்றும், தொழிலால் வந்தது என்றும் கூறுவர், ஆதலின் அதனை விடுத்து முன்னைச் சான்றோர்களால் கூறப்பெற்ற ''பொய்யில் புலவன்'' என்ற சிறப்புப் பெயரையே சூட்டுவாராயினர் என்பதும் பொருந்துமன்றோ. (மற்றும் நீலகண்டர், இயற்பகையார், மெய்ப்பொருளார் போன்ற அடியவர்களின் சிறப்புப் பெயரை முந்துறக்கிளத்தல் அவர் முறையாகும்)

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரும், நாவுக்கரையரும் நம் தமிழ் மறையைத் தம் திருவாக்கில் பொன்னே போல் பொதித்தும் பாடியருளினமை ஓர்ந்து சுந்தரர் பெருமானும் தக்க இடங்களில் பொய்யா மொழியைப் பெய்து வைத் திருத்தல் காண்பார்க்கு, அப்புலவர்பால் அவர்க்குள்ள ஈடுபாடு நன்கு உணரமுடிகிறது.

> "பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று"
> "யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
> வாய்மையின் அல்ல பிற"

என்று கூறும் இவரே பொய்யடிமை யில்லாத புலவர் ஆவர் எனக் கொள்ளுதலில் இழுக்கில்லை,

மற்றும் வேறு எந்தப் புலவரையும் நாயனர் என்று கூறுது இவரை மட்டும் திருவள்ளுவ நாயனர் என்றும் அவர் அருளிய குறட்பாவை திருக்குறள் என்றும் வழங்கி வருவதோடு சைவசமயமே சமயம் அச்சமயாதீதப்பழம் பொருளாம் செம்பொருளே சிவம் எனத்தெளிந்து அதனைச் சார்ந்த பேரடியார் இவர் என இனம் கண்டு தமிழ் மக்கள் இவர்க்குத் திருமயிலையில் கோயில் எழுப்பி சைவக் கோலத் துடன் திருவுரு அமைத்து நாடோறும் வழிபாடு செய்து வருவது ஒன்றே திருவள்ளுவரை பொய்யடிமை யில்லாத புலவர் என்பதை உறுதி யாக்குமன்றே.

ஆகவே சைவச்சான்ருேர், பெருமக்கள் பலரும் மேலும் ஆராய்ந்து வள்ளுவர் ஈராயிரம் ஆண்டில் இக்கருத்திற்கு வலிமை தேடித் தருவார்கள் என எண்ணி வெளியிடு கின்றேன்.

காரைக்காலம்மையார் சரித்திர ஆராய்ச்சி

(தி. மு. சபாபதி தேசிகர்.)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அறுபான்மும்மை நாயன்மாருள் திருத்தொண்டின் நெறி வாழ வருஞானத் தவமுனிவர் வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனர் கி. பி. 5-ஆம் நூற்ருண்டினர்; சிவானுபூதிச் செல்வர்; 81 வயதுவரை நைஷ்டிக பிரமசாரியாகவே வாழ்ந்தவர். தேவாரம் அருளிச்செய்த மூவர் முதலிகளில் காலத்தாலும் வயதாலும், பன்னூலாராய்ச்சியாலும் பல மதங்களில் நுழைந்ததாலும் உலகானுபவம் அனைத்தும் உணர்ந்த பெரியார் அவர்; ஜைனமதத்தில் நுழைந்து தருமசேனர் என்ற பட்டப்பெயரோடு மதாசாரியராய் இருந்தார். தமக்கையார் திலகவதியார் தம்பியார் மீண்டும் சைவசமயம் வந்தடையப் பன்னுள் திருவதிகை வீரட்டானரை வேண்ட, இறைவர் நாவுக்கரசருக்குச் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டார்; சிவதலங்களனைத்தும் யாத்திரை சென்று ஆங்காங்குத் திருத்தொண்டைச் செய்து அவ்வத்தலந்தோறும் அப்பர் திருப்பதிகங்கள் பாடியருளினுர். கடைசியில் கயிலைமால வரையில் கண்ணுதற் கடவுளைக் கண்டானந்திக்க இப்பூத உடலோடு சென்ருர். கால்களால் நடந்து கால்கள் தேய்ந்து, கைகளால் தவழ்ந்து கைகள் தேய்ந்து, மார்பினுல் ஊர்ந்து மார்புந்தேய்ந்து உருண்டு அங்கமெலாந் தேய்ந்து அடியடியாக வடக்கே போய்க்கொண்டிருந்தார். அவரை இடையிலே இறைவர் ஒரு வேதியராய்த் தோன்றி எங்கு போகின்றீரென்ன "கயிலைக் கண்ணுதற்கடவுளைத் தரிசிக்கப் போகின்றேன்," என்ருர், வந்த மெய்த்தவவேடர், "கயிலைமால் வரையாவது காசினி மருங்கு பயிலுமானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ?' அமரரும் அணுகுதற்கரிது, என்று கூறியதும், நாவுக்கரசருக்குக் கோபம் மேலிட்டு, ஐயா, உமக்கேன் அந்த விசாரம்? உம்மைக் கேட்டு நான் இவ்வளவு தூரம் வரவில்லை. போமய்யா போம்' ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளுமிவ்வுடல் கொண்டு மீளேன்," என மறுத்தார். அப்பரின் சொல்லுறுதியைக் கண்ட தவவேடத் தனிமுதலாய இறைவர், "ஓங்குநாவினுக்கரசனே எழுந்திரு'. என்றுரைப்ப,தேய்ந்த உடலெல்லாம் நல்லுடம்பாகி எழுந்தார். 'எம்பெருமானே, தேவரீரைத் திருக்கயிலையில் திருக்கோலத்தோடு தரிசிக்க அருளவேண்டும்' எனவேண்ட, இறைவர் இத்தடாகத்தில் முழுகிக் கயிலைக் கோலத்தைத் திருவையாற்றில் தரிசிப்பாய்" எனப்பணித்தார். அவ்விதமே தடாகத்தில்

மூழ்கி ஐயாற்றில் கயிலைக்காட்சியைக்கண்டு,''மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்பரவினர் எனப் பெரியபுராணம் அருளிச் செய்துள்ளது.

அமரரும் அணுகுதற்கரிதாய கயிலையை அம்மையார் அடைந்து தலையினால் மலைமீதேறி ''அம்மையே'' என நாதன் கூற, அப்பா வந்தடைந்தேன்'' என்று இறவாத இன்ப முதலாம் வரம்பெற்றார். இறைவர் ஆணையால் பழையனூர் வந்து, அங்கிருந்து ஆலங்காட்டிற்குத் தலையினாலே வந்தடைந் தாரென்பது மிகவும் ஊன்றிச் சிந்திக்கற்பாலது.

கயிலைமலை இமயத்தின் வடகிழக்கே சிறப்புமிக்க ஒரு பதி. அது செம்மைப் படாததும், செம்மைப்படுத்த முடியாதது மான வழியிலுள்ளது; பனிக்கட்டிகள் மேலும், மேலும் வீழ்ந்து கொண்டே இருக்கும் பதி. இப்பனிக்கட்டி மலைமீது கதிரவன் ஒளிபட்டதும் வெள்ளியங்கிரித் தோற்றம் உண்டாவது இயற்கை. அது உஷ்ண சக்தி ஒடுங்கி உடலிலுள்ள இரத்தம் உறைந்துவிடும் பகுதி. அப்பனிவரையில் சென்றால் மனித உடலில் உள்ள இரத்தம் முதலிய 7 தாதுக்களில் மூலப் பொருளாம் எலும்பு ஒன்றைத் தவிர்த்து, மற்றைய 6 தாதுக் கள் பனிக்கட்டியின் குளிர்மையால் செயலற்று ஒடுங்கி விடும். எலும்பை மாத்திரம் இப்பனிக்கட்டியின் குளிர்மை தாக்காது. இது உடற்கூறு தத்துவம். 7 தாதுக்களில் எலும்பு ஒன்றுதான் சிவத்தின் கூறு. மற்றைய 6 தாதுக்கள் சத்தி யின் கூறென்று சாத்திரங்கள் புகலும். பிருங்கி முனிவர் சக்தியை ஒதுக்கிச் சிவத்தை வழிபடச் சக்திக்குக் கோபமுண் டாகி, ''உமது சரீரத்திலுள்ள என் பகுதியை உதறி விடும்'' என்ன, பிருங்கி முனிவர் ஆறு தாதுக்களையும் உதறி, எலும்புக் கூடாய்ச் சத்தியற்று நிற்க முடியாமல் தள்ளாடி நின்றார். இறைவர், முனிவருக்கு இரண்டு கால்களோடு நடுவே ஒரு கால் அருள, அம்மையார் கண்டு பொறாமல் கோபித்து நீங்கி நோன்பிருந்து, அபின்ன சத்தியாய் (பிரியாத ஒரே உருவ மான) இறைவரின் இடப்பாகத்தைப் பெற்று அர்த்த நாரிய ரான வரலாறு பிரசித்தம். சக்தி (பலம்) உடையவன் அகம் பாவம் கொள்ளுவான் (அகம்–நான்). அகம் உடையோன் தன்னையோ தன் அறிவையோ, கயிலையையோ, இறை வரையோ கனவிலுங் காணமுடியாது.

''யான் எனதென்னும் (அகங்கார–மமகாரம்) செருக் கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்''. வானோர்க்கு உயர்ந்த உலகம் என்றது ஈண்டு கயிலைக்கு உள்ளீடாய் உள்ள

சிவலோகம். வானேருலகம் என்பது தேவலோகம். யான் எனதென்னும் அகங்காரமமகாரமாகிய சக்தியின் ஆறுதாதுக் களை உதறி என்புருவை அம்மையாரே வேண்டிப் பெற்றதாலன்றோ, பனிமலையின் ஊறுபடாவண்ணம் நேரே கயிலைக்கேகி, இறைவரைக் கண்டு உரையாடி அவர் வரம் பெற்று வந்தார். நானெனும் அபிமானத்தை உதறியதால் தாமேயாகிய இறைவருக்குத் தாயேயானுர்.

நாவுக்கரசர் சென்றடையாத கயிலையை அம்மையார் சென்றடைந்தார். இதில் அம்மையாருக்கும், அப்பரடிகளுக்கும் ஏற்றத்தாழ்வு கற்பிக்கவில்லை, செயலில் அவ்விதம் நிகழ வேண்டியதாயிற்று. அதற்குக் காரணங்களாவன :- அம்மையார் பெண்பால், இளமை அழகு, வடதிசைக்கயிலை வெகு தூரம், தனிமையாய்ச் சென்றடைய முடியாதபதி முதலியன வேயாம். ஆகவே தான் அம்மையாருக்கு இச்சிந்தனை எழுந்தது. அவர் தேய்வின்றியும் பனிமலை தாக்குருவண்ணமும் சென்றடைந்தார்.

நாவுக்கரசர் முதிர்ந்த வயதுடையவர்; ஆடவர்; சொற்குறுதிக்கப்பரென்ற உறுதிப்பாடுடையவர்; 'அப்பரே' என இறைவரால் அழைக்கப்பட்டவர். ஊன் உடைந்த தாதுக்கள் கயிலைப் பனிவரை செல்ல இடையூருகுமென்ற சிந்தனையை இறைவர் தோற்றுவிக்கவில்லை. எல்லாத் தல யாத்திரைகளைப் போலவே கயிலையையுங் கருதினுர். அம்மையார் எந்தத்தலத்திற்கும் சென்றதாகச் சான்றில்லை. அப்பரடிகள் இறைவரோடு இரண்டறக் கலந்து விட்டார். அவ்வகையில் அம்மையார் மிக்க திறமையானவர்கள். ஊனடைவனப்பை உதறினுர். சென்றடையாத திருவுடையாரை அடையச் சென்றடைய முடியாத கயிலை மால்வரைக்கேகினுர். யாரும் கேட்டிராத, கேட்க முடியாத, வரத்தைக் கேட்டும் பெற்றுவிட்டார். இறைவரின் அருகு வந்தணைய நோக்கி அம்மையேயென்னுஞ் செம்மை ஒரு மொழி உலகமெல்லாம் உய்ய இறைவர் திருவாக்கினுலேயே பெற்ருர்.

இவையனைத்தையும் விட "குலவிய தாண்டவத்தில் அவர் எடுத்தருளுஞ் சேவடிக்கீழ்" என்று மிருக்கின்ற அடிசேர் முத்திப்பேற்றையும் பெற்ருர்.

அம்மையாருக்கும் அப்பரடிகளுக்கும் உயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை; கற்பிக்கவும் கூடாது; கற்பிக்கவும் முடியாது. திருத்தொண்டத்தொகையில் வரும் அடியார் அனைவரும் ஒரே கற்கண்டுமலை. இம்மலையில் எந்தப் பாகம் இனிக்குமென்பதைப் போன்றது அச்செயல்.

கி. பி. 5–ஆம் நூற்றுண்டில் நம் சைவந்தழைக்கப் பரசமயகோளரியாய்ச் சீகாழிப்பதியில் சம்பந்தர் அவதரித்தார். பேதையார் பொற்கிண்ணப் பாலடிசி லுண்டு இறைவரால் ஆட்கொள்ளப்பட்டார். மூன்ருவது வயதிலிருந்தே, "வம் பருவரிவண்டு மண நாறமலரும் 'மதுமலர் நன்கொன்றை யான் அடியலாற்பேணு எம்பிரான் சம்பந்தப்' பரமாசாரியார்

இத்திருவாலங்காடாம்,

"இம்மையிலே புவியுள்ளோர் யாருங்காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மையாளும்
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருஆலங்காடா மென்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்கஅஞ்சி
சண்பைவருஞ் சிகாமணியார் சாரச்சென்ருர்
மெய்ம்மைநிலை வழுவாதபதி" (பழையனூர்) யில் அன்றிரவு துயிலலுற்ருர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "அம்மை திருத் தலையாலே வலங் கொள்ளுந்திங்கண்முடியாராடுந் திருவாலங் காட்டினயல் பழையனூர் உழையெய்தித்தங்குவார்" என்பதால் அம்மையாரெனுஞ் சிறப்பை உணர்க.

மஹாதேவரென்ருல் சிவபெருமானையும், கோயில் என்ருல் சிதம்பரத்தையும், பெரியபுராணம் என்ருல் திருத் தொண்டர் புராணத்தையும் குறிப்பதுபோலச் சைவத்தில் அம்மையார் என்பதும் காரைக்காலம்மையாரையேதான் குறிக்கும். ஏன்? அது தாயிலியாகிய சிவபெருமானுடைய திருவாக்கால் அம்மையேயென அன்போடழைத்த பெய ரன்ருே?

தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் இருந்தாலும் அம்மை யாருக்கு முன்னர் எந்தப் பாடலையும் பண் அடைவோடு தாளம் அமைத்துப் பாடினதாக இல்லை. தேவார ஆசிரியர் களாகிய மூவர் முதலிகளுக்கு முன்னரே அம்மையார் பாடி யருளினுர். அதனுற்ருன் அம்மையார் அருளிய திருவாலங் காட்டுப் பதிகத்திற்கு மூத்த திருப்பதிகம் என்று பெயர் வரலா யிற்று. ஏழிசைகளுக்கும் அம்மையார் காலத்தே துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, ஓசை என்று அம்மை யாரே பெயர் பகர்கின்ருர்.

சிறப்புகள் :—

காலத்தால் முற்பட்டமையாலும் அம்மையாருக்குச் சிறப் புண்டு; கயிலைக்குச் செல்ல வனப்புமிக்க தசையை உதறி

என்புருவாய் பேய்வடிவை வேண்டிப் பெற்றதாலும் சிறப்புண்டு; சென்றடையாத கயிலைக்குச் சென்றதாலும் சிறப்புண்டு; மீளத்திரும்புதலில்லாக் கயிலையிலிருந்து திரும்பிவந்ததாலும் சிறப்புண்டு; இறைவனின் அடியின் கீழ் என்று மிருத்தலினாலும் சிறப்புண்டு; முதன் முதலில் பண் அடைவோடு தேவாரத் திருப்பதிகம் பாடியதாலும் சிறப்புண்டு. இச்சிறப்பனைத்தும் ஒருங்கே பெற்ற அம்மையாருக்கு அருள் செய்து நடிக்கும் நடராசப் பெருமானுக்கு உரிய சபைகள் ஐந்தனுள் அருவமும், அருவுருவமுமாய் அப்பொருள் உருவத்திருமேனி தாங்கி முதன் முதலில் தாண்டவமாடிய இரத்தின சபையில் எண்தோள்வீசி உயரத் தூக்கிய திருவடியையுடைய கூத்தப்பிரானின் திருவடிக்கீழ் அம்மையார் அமர்ந்துள்ளார். இது மேற்கூறிய சிறப்புகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் மற்றெல்லாவற்றையும் விடத்தனிச் சிறப்புடையதன்றோ? மாலற நேயம் மலிந்தவர் வேடத்தை அரனெனத் தொழுது "நம்படியார் அணைந்தால் நல்ல திருவமுதளித்து, செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலு முதலாகத் தம்பரிவினாலவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்து உவக்கும் அம்மையாரின் அருஞ் செயல். அதனை உலகறியச் செய்ய இறைவர் கனிந்த உள்ளமுடையாரைக் கனிநிமித்தம் உலகிற் கறிவித்து, தொண்டை நன்னாடு சான்றோருடையது என்பதைச் சான்றாண்மையில் புனிதமிக்குடைய புனிதவதியாரைத் தொண்டை நாட்டுத் திருப்பதியான திருவாலங்காட்டில் தம் அடியிற் கீழிருத்தி இப்பதியை மேலும் தனிச் சிறப்புடையதாகச் செய்த திருவருள் நம்மால் போற்றுந்தகைத்தோ!

நீலியின் பொருட்டு வணிகன் ஒருவனுக்குச் சொன்ன சொல்லைக் காக்க அவன் ஒருவன் உயிருக்காக 70 பேர் பழையனூர் வேளாண் பெருமக்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டின் முன் தீப்பாய்ந்த சிறப்புச் சின்னங்களாலும் இவர் தம் அருஞ்செயலைப் போற்றிய அருள் நூல்களாலும் சிறப்புடையது இத்திருவாலங்காடு.

இந்தியா தேசம் தெற்கு வடக்காக நீண்டுள்ளது. தென் பகுதியில் தமிழகத்திருந்த குமரியாறு, பஃறுளியாறு முதலாக நீண்ட நிலப்பரப்புக் கடல்கோளினால் மூழ்கடிக்கப்பட்டது எனச் சரித்திர வல்லுனர் ஆராய்ந்து காட்டியுள்ளார்கள். உதாரணமாக, அண்மையிலும் தனுஷ்கோடிப் பகுதி கடல் கொண்டது கண்கூடு. கடல் கொள்ளாத காலத்து உள்ள நிலப்பரப்பைக்கொண்டு நோக்கினால் திருவாலங்காடு நடு

மையமாய் இருந்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இத் தலத்து எண்தோள் வீசிய மணியம்பலக்கூத்துகந்தாரின் திருவுருவ அமைப்பும் இந்திய தேசப்படமும் ஒப்புமையுடையன. வடபகுதி அகன்று தென்பகுதி குறுகியுள்ளதைப் போன்றே உருவ அமைப்பும் உள்ளது. தூக்கிய திருவடி திருக்கயிலையிருக்கும் இடத்தைக் குறிக்கிறதை உற்று நோக்குக.

சைவசமயத்தின் சிறப்பும், சிவத்தியல்பும், திருவாலங் காட்டுத் தலப்பெருமையும் கூத்தப்பிரானின் தத்துவ விளக்கமும் தனி நூலாக எழுதிவிட்டால் பெரும் பயன் உண்டு. உள்நின்ற நாவிற்கு உரையாடியாய் இறைவர் கூட்டிவைத்தால் முடிவுறும்.

வேண்டுகோள் :—

இச்சிறப்பினதாய திருத்தலம் 5 சபையில் முதலாயிருந்தும், மற்று 4 சபைகளைப் போல விளங்கவேண்டுமன்றோ? ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமான "யுனெஸ்கோ" சிறப்புள்ள ஆலயங்களுக்குப் பெரும் பொருள் உதவிச் சிறப்புறச் செய்யத் திட்டமிட்டுள்ளதில் திருவரங்கத்திற்கு (SRIRANGAM) இடந்தந்துள்ளது. இத்தலமும் சிறப்பில் முதலிடம் பெற்றதன்றோ? நாவுக்கரசர், "ஒன்றாயுலகனைத்துமானார்தாமே" என்றதால், உலகத் தலத்திற்கே இதனை முதலிடமாக ஆக்கி வைக்க, நம் தமிழகத் தலைவர்கள் அமெரிக்க நாட்டுத் தூதுவர் அவர்களின் பேருதவியோடு "யுனெஸ்கோ" ஸ்தாபனத்தை அணுகி ஆவன செய்ய வேண்டுகின்றேன்.

சேக்கிழார் பெருமானே, "அம்மையார் சீர்பரவல் யார் அளவாயினதம்ம!" என்றமையால், பக்திநெறியும், முக்தி நெறியும், அறியாமூர்க்கனும். பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலையனும், சொல்லறத்துள் ஒன்றேனுமில்லாதேனுமான, அடியேன் இவ்வாராய்ச்சிக் கட்டுரையெழுதினதைக் கண்டு கற்றோர் எள்ளி நகையாடுவாரென்பது தெரிந்தும், என் வெள்ளறிவின் ஆசைமீதூர வரைந்துவிட்டேன். அறிவுலகம் நீர் பிரித்து அன்னமுண்ணும் தூய தீம்பால் போல் கொள்க.

ஆழ்க தீயது, எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே!

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக் கட்டளைச் சொற்பொழிவுகள்.

(கொ. நீ. சி.)

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆதரவில் மேற் குறித்த கட்டளைச் சொற்பொழிவுகள் 5—11—69 முதல் 9—11—69 வரை 5 நாட்களில், சென்னை இராயப்பேட்டை மோபரீஸ் சாலை, 3-வது எண்ணுள்ள திரு. வி. க. மணி மண்டபத்தில் காஞ்சிபுரம் சித்தாந்தக் கலைச் செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி., அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. இவ்வைந்து நாட்களிலும், அவர் முறையே, பின்வரும் பொருள்களைக் குறித்துச் சொற்பொழி வாற்றினர் :—

1. சைவ சமய மூல நூல்களும் ஆசிரியர்களும்.
2. கடவுள் இயல்பு.
3. உயிரின் இயல்பு.
4. பாசத்தின் இயல்பு.
5. சாதனமும் பயனும்.

இச் சொற்பொழிவுகள் முதலியார் அவர்களுக்கே உரிய பாணியில் உயர்ந்த தரத்தில் அமைந்திருந்தன. கருத்துக்களில் நுண்மையும், சொற்களில் நயமும் இருந்தன. அவற்றில் அமைதியும் ஆழமும் இருந்தன. நுண்பொருள்களை எண் பொருளாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் முதலியார் அவர்கள் நிகரற்றவர். இச் சொற்பொழிவுகளைக் கேட்க வந்திருந்தோரின் தரமும் உயரியதாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் சொற்பொழிவு முடிந்தபின் ஐயந் தெளிதல் அல்லது கலந்துரையாடல் என்ற முறையில் ஏறத்தாழ, 20 நிமிடங்கள் வரை வந்திருந்தவர்கள் வினாக்களை எழுப்ப முதலியார் அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

இச் சொற்பொழிவுகளின் சுருக்கத்தைத் தருதல் இக் கட்டுரையின் நோக்கமன்று. அவர் தெரிவித்த சில கருத்துக்களை மட்டும் உதிரி மலர்கள் போல் இங்கே பொழிப் போம்.

சைவ சித்தாந்தத்தின் மூல நூல்களில் தலையாயது திருக்குறள் என்று சொற்பொழிவாளர் கூறினர். திருவள்ளுவர் நாற்பாலையும் மூப்பாலில் அடக்கியுள்ளார். திருக்குறள் சைவ நூலாகவே கருதப்பட்டதற்கு ஆதாரவு, ஔவையார் இயற்றிய நல்வழியில் உள்ள பின்வரும் செய்யுள் ;—

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர்"

ஔவையார் இயற்றிய வாக்குண்டாம் ஒழுக்க நூல்; அவர் இயற்றிய நல்வழி ஞான நூலே.

கடவுள் வழிபாட்டை வற்புறுத்த வேண்டுமா, ஒழுக்கத்தை வற்புறுத்த வேண்டுமா என்ற கேள்விக்குப் பதில் தெய்வ வழிபாட்டின் அடிப்படையில்தான் ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்று சொற்பொழிவாளர் கூறினர். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இக் கருத்தையே தெளிவுபடுத்தியுள்ளனர். ஞானசம்பந்தர் வைதிக நெறியைப் புறக்கணிக்கக் கூடாது என்பதையும், நாவுக்கரசர் தொண்டு நெறியைப் பின்பற்ற வேண்டியதையும் வற்புறுத்தியுள்ளனர்.

கடவுள் வழிபாட்டிற்குத் திருக்குறள் மட்டும் போதாது. திருக்குறளில் வரும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தோத்திரப் பாடல்களாகக் கருதப்படமாட்டா.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்னும் குறளில் வரும் 'புரிந்தார்' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர், 'எப்பொழுதும் சொல்லுதல்' என்று பொருள் எழுதுகிறார். அதாவது இறைவன் தோத்திரப் பாடல்களை இடைவிடாது பாடவேண்டும் என்பது பொருள். திருவள்ளுவருக்கு முன்பும் பல தோத்திரப் பாடல்கள் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

திருஞானசம்பந்தர், திருநீலகண்டப் பெரும்பாணரையும் அவர்தம் மனைவியார் மதங்கசூளாமணியாரையும் முதன் முதலில் சந்தித்தவுடன் அவர்களைத் தோணியப்பர் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று யாழ் வாசிக்கும்படி வேண்டினர். பாணரும் தம் மனைவியாருடன் சிவபெருமான் திருப்பாட்டினை ஒன்றித்துப் பாடி யாழ் வாசித்தார் என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். ஆகையால், தோத்திரப் பாடல்கள் பல திருஞானசம்பந்தர் காலத்திற்கு முன்னரே பாடப்பெற்று வந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

திருக்குறளுக்குச் சைவர்கள்தாம் சரியான பொருள் கண்டுள்ளனர் என்று கூறலாம். எடுத்துக்காட்டாக,

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறளுக்கு இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும், தெய்வத்தை ஒரு பெண் தொழக்கூடாது, கொழுநனைத்தான் தொழவேண்டும் என்று பொருள் கொண்டுள்ளனர். ஆனால் திருஞானசம்பந்த சுவாமிகள் "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்று தொடங்கும் பூம்பாவைப் பாசுரத்தில்,

"மண்ணினிற் பிறந்தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்"

என்னும் உண்மையை உலகறிய எடுத்துரைத்துள்ளார். (ஆண், பெண் உள்ளிட்ட யாவரும் இறைவழிபாட்டிற்குரிய

வர் என்பதைக் குறிக்கவே, 'மண்ணினிற் பிறந்தார்' என்று பொதுப்படச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார் போலும்)

மேற்குறித்த குறளுக்குப் பொருள், மனிதன் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவரைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்பது. குழந்தைகளுக்கு "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"; மாணவனுக்குக் குருவே தெய்வம், கற்புடைப் பெண்டிர் கணவனைத் தெய்வமாகக் கருதவேண்டும். இதனால், இந்நிலையில் இறைவனைத் தொழக்கூடாது என்பது பொருளன்று.

திருமணமாகிய பெண்களுக்கும் இறைவழிபாடு இன்றியமையாதது என்பது காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் முதலியோர் புராணங்களினாலும் விளங்கும். காரைக்காலம்மையார் புராணத்தைக் குறிப்பிடுகையில், இறைவன் அம்மையாரைப் பார்த்து, "அம்மையே!" என்றதன் பொருள் 'தாயே' என்பதன்று, 'மகளே' என்பது தான் என்று திரு. முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது அங்கணர் 'அம்மையே' என்றருள் செய "அப்பா" என்று அவர் பதில் கூறி இறைஞ்சினர் என்பதிலிருந்தும் தெரிகிறது.

கடவுள் இயல்பைக் கூறும்போது, கடவுள் நான்கு நிலைகளில் இருக்கிறார் என்று சொற்பொழிவாளர் கூறினர். அவையாவன:—

1. உலகமாகவே இருக்கிறார்.
2. உலகத்திற்குக் காரணமாக இருக்கிறார்.
3. உலகத்தைச் செலுத்துபவராக இருக்கிறார்.
4. உலகத்தைக் கடந்த நிலையிலும் இருக்கிறார்.

உயிரிலக்கணம் கூறுகையில், 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' என்னும் சிவஞானபோத வரியை விளக்கி உயிர் பிறப்பு நிலையில் அசத்தை அசத்தால்

அறிந்து, அசத்தின்கண் உளதாய் நிற்கும் என்றும் வீட்டு நிலையில் சத்தைச் சத்தால் அறிந்து சத்தின்கண் உளதாய் நிற்கும் என்றும் சொற்பொழிவாளர் கூறினர். மேற்கூறிய சிவஞான போத வரியை 2, 3, 7-ஆம் வேற்றுமைப் பொருள்களாகக் கொள்ள வேண்டும்.

ஐந்தாம் நாள் சொற்பொழிவு முடிந்தவுடன் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார், ஓய்வுபெற்ற சட்டத்துறை அரசுச் செயலாளர் திரு. டி. எஸ். இராமலிங்கம், திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு, திரு. ந. சஞ்சீவி ஆகியோர், சித்தாந்தக் கலைச் செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களைப் பாராட்டிப் பேசினர். சமாஜச் செயலாளர் திரு. மு. நாராயணசாமி முதலியார் சொற்பொழிவாளருக்கு மாலை மரியாதை செய்ய, திரு. கொ. நீ. சிங்காரவேலு அவர்கள் சமாஜச் சார்பில் யாவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

திரு. கா. இராமநாதன் செட்டியார் கட்டளைச் சொற்பொழிவுகள் தவணை வைப்பு நிதியில் வைக்கப்பெற்ற ரூபாய் ஆயிரத்திற்கு வரும் வட்டிப் பணத்தைக் கொண்டு ஏற்பாடு செய்யப்படுகின்றன. இம் மூலதனத்தைக் கொண்டு பெரிய ஏற்பாடுகள் செய்ய முடியா. ஆண்டு தோறும் இக் கட்டளைச் சொற்பொழிவுகளைப் பல்கலைக் கழகக் கட்டளைச் சொற்பொழிவுகள் போன்று உயர்ந்த முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது சமாஜத்தாரின் பேரவா. இதற்கு மூலதனத்தைப் பெருக்கவேண்டும். ஆகையால், செட்டியார் அவர்களின் தொண்டில் ஈடுபட்டோர், அவர் உற்றார் உறவினர் யாவரும் நன்கொடை செலுத்தி, இம்மூலதனத்தை ஐயாயிரத்திற்குப் பெருக்க வேண்டுமென்று சமாஜம் கேட்டுக் கொள்கின்றது.

ஒரு வேண்டுகோள்

(துணையாசிரியர்)

நம் சைவ சித்தாந்த மகா சமாஜம் தொடங்கப்பெற்று 64 ஆண்டுகள் முடிந்தும் இன்னும் அதற்கென்று ஒரு தனிக் கட்டிடம் அமையாதது ஒரு பெருங் குறையே. முன்னருள்ள பெருமக்கள் குறையென நினைத்திருந்தால் அதை எளிதில் முற்றுப்பெறச் செய்திருப்பர். ஏனோ இறைவன் அப் பெருமக் கள் மனத்தினில் அத்தகைய எண்ணத்தைத் தோற்றுவிக்க வில்லை என்பது புரியாத புதிராகவேயிருக்கிறது?

இடையில் பல முறைகளில் இக்கட்டிடம் பற்றிப் பலர் முயன்றனர். ஆனால் அம் முயற்சிகள் கருவுற்றுப் பலனளிக் கும் நிலையில் வரவில்லை. தற்போது நம் சமாஜத் தலைவர் திரு. முத்துசாமி பிள்ளையவர்கள் கட்டிடம் கண்டு தீரவேண்டு மென மிக முனைந்துள்ளார்கள். அதற்கென ஓர் இடமும் மயிலாப்பூரில் வாங்க, வேண்டிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அந்த இடம் நம் பொறுப் புக்கு வந்து சேர்வதுறுதி.

அதைக் கட்டி முடிக்கப் பல்லாயிரம் வெண் பொற்காசு கள் ஆகும் என்பது யாவரும் அறிந்ததே. இதற்காக நன் கொடை பொதுமக்களிடமிருந்து பெறுவதென்று தீர்மானிக்கப் பட்டது. அதற்கு 200-00 ரூபாயும் அதற்கு மேலும் நன்கொடை கொடுப்பவர்கள் பெயர்களைக் கட்டிடத்தில் கல்லில் பதிப்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆதலால் நன்கொடை செலுத்துபவர்கள் சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டிடம் கட்டுவதற்கெனக் குறிப்பிட்டுச் செயலாளருக்கு நன்கொடையை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின் றனர். சைவத் தொண்டுகள் சிறக்க அதற்கெனப் பாடுபடும் சமாஜத்துக்குரிய கட்டிடம் கட்டும் முயற்சியில் "சேரவாரும் சகத்திரே" என யாவரையும் அழைக்கின்றோம். காலமுண் டாகவே தங்கள் பங்குக்குரிய சமயக் காணிக்கையைக் கொடுக்க முந்துமினே என வேண்டிக் கேட்டுக் கொள்கின் றோம்.

மதிப்புரை

"காலகாலர்-திருமுறை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்ருேம். இது நம் சித்தாந்த ஆசிரியர் திரு. மு. அருணுசலம் பிள்ளை எம். ஏ. அவர்கள் மணிவிழா வெளியீடாக நம் சமாஜப் பேரன்பர் கடலூர் திரு. கி. நாராயணசாமி நாயுடு அவர்களால் 26—10—69 அன்று வெளியிடப்பெற்றது.

இந்நூலில் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் காலனைக் காய்ந்த பகுதிகள் அடங்கிய சிறந்த பாடல்கள் 82 திரட்டப்பட்டுள்ளன. காலகாலர் அருளிருக்கின் காலன் பற்றி யாரும் அஞ்சவேண்டுவதில்லை. ஆகவே அவன் அருள் நாட்டம் வேண்டுவோர் எல்லாரும் இந்நூலை அவசியம் படித்தல் வேண்டும். விலை 25 காசுகள்.

தபாற் செலவு வேறு. நூல் கிடைக்குமிடம் :—

திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள்,

2, சீதாராம நகர், கடலூர்-1.

(அம்பை)

வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் மணிவிழாச் சிறப்பு மலர் ஒன்று வரப்பெற்ருேம். இது அப்புலவர் பெருமானுரின் மணிவிழா நினைவாக வெளியிடப் பெற்றது. இம்மலரில் திரு. முதலியார் அவர்களின் பெருமைகள் அனைத்தையும் ஒருசேரக் காணலாம். மலரின் முற்பகுதியில் அருள்வாக்குகள் என்ற தலைப்பில் நமச்சிவாயப் பதிகங்களும் பிற திருமுறைப் பாடல்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன மிகவும் போற்றத்தக்கது. டபுள் கிரௌன் அளவு 128 பக்கங்கள் கொண்ட இம் மலரின் விலை குறிப்பிடப்பெறவில்லை.

(அம்பை)

"ஸ்ரீ காமாக்ஷிதேவி" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இது கச்சியம்பதியிலுள்ள ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான வெளியீடாகும். இதனை எழுதியவர் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. பு. மா. ஜயசெந்தில்நாதன் அவர்கள் ஆவர். பல நூல்களிலிருந்து காஞ்சி பற்றிய பல செய்திகளைத் தொகுத்து இந்நூலில் வெளியிட்டுள்ளார்.

இந்நூலிலிருந்து காஞ்சித் தலப் பெருமைகள் எல்லாவற்றையும் ஒருசேர அறிந்து கொள்ளலாம். சிறப்பாக அன்னை காமாட்சியம்மையின் பெருமைகளையும் அவள் திருக்கோயிலின் சிறப்புகளையும் அக் கோயிலை நன்முறையில் அருளாட்சி செய்து வரும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் வரலாறு, பெருமைகள் முதலியவைகளையும் இச்சிறு நூலில் சுருக்கமாகக் காணலாம். கிரௌன் அளவு 56 பக்கங்கள் கொண்ட இந்நூல் விலை 75 காசுகள். வேண்டுவோர்: ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம் என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(அம்பை)

பிறசெய்திகள்

சென்னை வடமலை மேஸ்திரி தெரு, திருநாவுக்கரசு சுவாமிகள் பக்தஜன சபை 25-12-69 அன்று திருத்தணிகை செங்கல்வராயப் பெருமானுக்குப் புஷ்பநாக ஊஞ்சல் விழா நடத்தி வைப்பதுடன் திருமுறைப் பாராயணம், சைவ சமயச் சொற்பொழிவுகள் முதலியனவும் நிகழ்த்தும். வேலூர் மார்க்கபந்து முதலியார், தருமபுரம் P சுவாமிநாதன் ஆகியோர் தமிழிசை ஓதுவர். திரு. சே. த. இராமலிங்கம் பிள்ளை முதலியோா விரிவுரை நிகழ்த்துவர். வாய்ப்புள்ளோர் சென்று நற்பலன் பெறுக.

நம் சமாஜ உறுப்பினர் புலவர் S. அருணசலம் அவர்கள் திருகமகனுர் அ. சுப்பிரமணியம் எம். ஏ., பி. எல். அவர்களுக்கும் பாலக்காடு திரு. P. K. கிருஷ்ணசாமிப் பிள்ளை அவர்கள் திருமகளார் சுவர்ணலதாவுக்கும் பாலக்

காட்டில் 7-11-69 அன்று திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. புதுமணத் தம்பதிகள் மாதொருபாகன் தண்ணருளால் எல்லா நன்னலங்களும் எழில்பெறப் பெற்று நீடுவாழ அம்மையப்பன் அருள் செய்ய வேண்டி வழுத்துகின்றோம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் மடவார் விளாகம் ஸ்ரீ வைத்திய நாத சுவாமி ஆலயத்தில் சமாஜச் செயற்குழு உறுப்பினர் திரு. க.சி. வேலாயுதன் மற்றும் சில அன்பர்களது முயற்சியால் 8—9—67ல் வார வழிபாட்டுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் இரண்டாவது ஆண்டு விழா அறநிலையப் பாதுகாப்புத் துறை டிப்டி கமிஷனர் திரு. P. R. பக்ரிசங்கர் M. A. B. L., அவர்கள் தலைமையில் 12-9-69ல் சிறப்பாக நடந்தது. வடக்கு ரதவீதி திரு. செல்லையா முதலியார் என்ற S. S. இராமசாமி முதலியார் அவர்கள் நினைவு மலராக "சிவாலய வழிபாட்டு முறையும், தோத்திரத் திரட்டும்" என்ற சிறுநூல் இலவச வெளியீடாக வெளியிடப்பட்டது. சைவ அன்பர்கள் திரு T. M, சிவகுருநாதன், வித்வான் திரு. உ. குமாரசாமி முதலியார், புலவர் திரு. க. கொன்றையாண்டி, சமாஜச் செயற்குழு உறுப்பினர் திரு. க. சி. வேலாயுதன் முதலியோர் வழிபாட்டின் சிறப்புப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். மக்கள் திரளாக வந்திருந்தனர். கூட்டத்திற்குப் பிறகு திரு ஆவுடையப்ப பிள்ளை அவர்களது திருமுறை இசையுடன் கூட்டு வழிபாடு நடந்தது.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 2-11-69ல் கண்ணேசப் பெருமான் திருக்கோவிலில் காஞ்சிச் சிவதல வார வழிபாடும் 9—11—69 ஞாயிறன்று திருவாவடுதுறை மடாலயத் திருக்கோயிலில் மெய்கண்டதேவ நாயனர் திருநாளும் 15-11-69 அன்று பாலாற்றுக் கடைமுழுக்கு வழிபாடும் சிறப்புற நிகழ்ந்தன. பல அன்பர்கள் சொற்பெருக்காற்றினர்.

ஸ்ரீ பாலசுப்பிரமண்ய பக்த ஜன சபையின் சார்பில் மகா ஸ்கந்தசஷ்டி விழா 9-11-69 முதல் 16-11-69 முடிய நிகழ்ந்தது. சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் கந்தபுராண விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். மேலும் 17-11-69, 24-11-69, 1-12-69, 8-12-69 கார்த்திகைச் சோமவாரங்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன

புரசைத் திருநெறிக்கழக 105ஆம் திங்கள் வழிபாடு 16-11-69 ஞாயிறு மாலையில் அயன்புரம் ஐ. சி.எஃப். காலனி எதிரில் உள்ள விநாயகர் திருக்கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தணிகைமணி டாக்டர் வ சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள் பெயரில் நிறுவியுள்ள "திருமுறைப் பரிசுச் சொற்பொழி'வின் முதல் விழா 21-11-69, 22-11-69 ஆம் நாள்களில் சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் நடைபெற்றது. "திருஞான சம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்" என்னும் பொருள் பற்றிச் செஞ்சொற்கொண்டல் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இவ்விருநாள் விழாவிற்கும் காஞ்சிபுரம் சிவத்திரு ஞானப்பிரகாச சுவாமிகள் தலைமை தாங்கியருளினர்.

சென்னை குயப்பேட்டை சண்முக ஞானபுரம் தமிழ் வேத பாராயண பக்தஜன சபையின் 57-ஆம் ஆண்டு திருநெறித் தமிழ் வேதத் திருமுறை விழா 24-11-69 முதல் 30-11-69 முடிய மிகச் சிறப்புறப் பல அறிஞர்கள் சொற்பெருக்குடன் நிகழ்ந்தது. தருமபுரம் சுவாமிநாதன், காஞ்சிபுரம் ஆ. விநாயக முதலியார் ஆகியோர் திருமுறை ஓதலும் போற்றத்தக்கதாயமைந்தது.

திருமழபாடியில் அப்பர் அருள் நெறி மன்றத்தின் சார்பில் வெள்ளிக்கிழமை தோறும் குடந்தை ப. சுந்தரேசனார் அவர்கள் திருத்தொண்டர் புராணப் பாராயணம் செய்து வருகின்றார்கள். இதனைப் போன்று மன்னார்குடி கயிலாச நாதர் திருக்கோயிலில் அவ்வூர்ச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் பெரிய புராணப் பாராயணமும் சைவசமயப் பிரச்சாரமும் திரு. சுந்தரேசனாரே ஞாயிற்றுக்கிழமை தோறும் நிகழ்த்துவது போற்றத்தக்கது. இம்முறையில் அவ்வம்மாவட்டத்தினரும் ஓரன்பரைக் கொண்டு பல இடங்களில் நிலையாக வாரமொரு நாள் சமயப் பிரச்சாரம் செய்யச் செய்தால் நிலையுள்ள பயன் கிடைக்குமென்பதுறுதி. ஆவன கருதுவார்களாக.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 30-11-1969ல் ஈரோடு. திரு. அ. ஞானசம்பந்த முதலியார் அவர்களால் "தம்பிரான் தோழர்" என்ற தலைப்பில் சித்தாந்த தத்துவங்களை விளக்கி அரிய விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. செயலாளர் திரு. சிவப்பிரகாசம் நன்றி கூறினார்.

சிவத்திரு ஆறுமுக நாவலரவர்கள் 90 ஆவது நினைவு நாள் விழா மதுரை சைவ சித்தாந்த சபையில் 1-12-69 திங்கள் மாலையில் திரு. G. கலியாணம் பிள்ளை எம். ஏ. அவர்கள் தலைமையில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பலர் நாவலரவர்களின் சைவத் தொண்டு, தமிழ்த் தொண்டின் பெருமைகளை விளக்கிப் பேசினர்.

நம் சமாஜத் துணைத்தலைவர் திரு K. E. அருணாசல முதலியார் எம். ஏ., பி. காம். அவர்கள் 5-12-'69 அன்று மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். நம் சமாஜத்தினர் அவர் இன்பச் செலவு வெற்றியுடன் அமைய மாலை அணிவித்து வாழ்த்துக் கூறினர். அங்கங்கு நம் துணைத்தலைவர் நம் சித்தாந்த சைவம் உலகெலாம் ஓங்க ஆம் வழிவகைகளை ஆய்ந்து வருவார் என்று எதிர்பார்க்கிறோம். மலேயாவாழ் நம் சமாஜ அன்பர்கள் யாவரும் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். அவர்கள் பயணம் வெற்றி நடையுடன் நிறைவேற பரம்பொருள் அருள் புரிய வாழ்த்தி அமைகின்றோம்.

திருச்சி அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர் திரு. சொ. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த 52 பேர் சிவம் பெருக்கும் தொண்டிலீடுபட்டுத் தல யாத்திரை மெற்கொண்டு 6—12—69 இரவு கபாலீச்சுர வழிபாட்டுக்கு வந்து சேர்ந்தனர். நம் சமாஜச் சார்பில சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் அவர்களை வரவேற்றுபசரித்தார்கள்.

நம் சமாஜச் செயற்குழு முதலியவற்றில் தொண்டாற்றியவரும் தஞ்சை மாவட்டத்தில் சமாஜத் தொண்டுகள், கோடை வகுப்புகள் முதலியவற்றை ஆற்றி வருபவருமாகிய மஞ்சக் கொல்லை உயர்திரு. இராம. ச. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்களுக்கு 17-11-69 திங்களன்று அவர்களூரிலேயே அறுபதாண்டு நிறைவு விழா மிகச் சிறப்புற நிகழ்ந்தது. நம் சமாஜச் சார்பில் செயலாளர் வாழ்த்திதழ் வாசித்து அளித்தார். மற்றும் பல பேரன்பர்களும் பங்கு கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மணிவிழாக் கொண்ட சைவப் பெருஞ் சீலத்தம்பதிகள் மற்றும் பல்லறங்களும் நன்னராற்றி நிறைபெரு வாழ்க்கையெய்தி இந்நிலத்து நீடுவாழ சிக்கற் சிங்கார வேலவப் பெருமான் தண்ணளிகூர அவனருளையே வேண்டி வழுத்துகின்றோம்.

சமாஜத்தின் ஆயுள் உறுப்பினரும், நிர்வாகக்குழு அங்கத்தினராய் இருந்தவரும், ஆகிய கி. இல. பழனிசாமி B. A., L. T. அவர்களுக்கு அறுபதாண்டு நிறைவு விழா 29-11-69 அன்று நிகழ்ந்தது. இவ்வன்பர் அவர்கள், பலருக்கும் தெரிவிக்காமல் ஆடம்பரம் இல்லாது, கோடம்பாக்கத்தில் தம் வீட்டுக்கு அருகில் உள்ள திருப்புலீச்சுரமுடையார் கோயிலில் அபிஷேக அர்ச்சனைகள் செய்து சிறப்பு வழிபாட்டோடு மணிவிழாவை நடத்திக் கொண்டார்கள். இவர் கல்வித்துறையில் ஜில்லாக்கல்வி அதிகாரி போன்ற பெரும் பதவிகளைத் திறம்பட வகித்தவர். உழைப்பினாலும் ஒழுங்கினாலும் முன்னேறியவர். பேச்சிலும், செயலிலும் மிகவும் கண்டிப்பானவர் என்று பெயர் வாங்கியவர். கல்வித்துறைத் தலைவர் முதல் அத்துறையிலுள்ள நெருங்கிய அன்பர் பலரும், சமாஜத்திலிருந்து சித்தாந்தம் ஆசிரியரும், விழாவில் கலந்து கொண்டு தங்கள் மகிழ்ச்சியையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொண்டார்கள். இம்மணிவிழா நினைவாக அறுபது மணிகள் எனும் திருக்குறள் திரட்டு நூல் ஒன்று அன்பளிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது.

மணி விழாத் தம்பதிகளுக்கு உமாமகேசுவரப் பெருமான் எல்லா நல்வாழ்வும் அளிக்க வேண்டும் என்று சமாஜம் வாழ்த்துகின்றது.

உ

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

சைவப்புலவர் தேர்வு - 1969

சைவப்புலவர் தேர்வு

இலக்கணம்

காலம்: 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—கீழ்க்காணும் உட்பிரிவுகளில் வகைக் கொவ்வொன்ருக 4 உட்பிரிவுகளை நீக்கிவிடுக. எல்லா வினுக்களுக்கும் மதிப்பெண் சமம்.

(அ) 1. "மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்"

இச் சூத்திரப் பொருளை விளக்குக.

2. ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்குந் தொடர் மொழி எனப் பிரித்தற்குரிய காரணத்தினை விளக்குக.

3. நூற்றிருபஃது எவ்வாறு புணர்ந்துள்ளது ? விதிகூறி விளக்குக.

4. எழுத்ததிகாரத்தில் காணப்பெறும் இயல்கள் யாவை? அவ்வாறு பிரித்தற்குரிய காரணத்தினையும் விளக்குக.

5. தொல்காப்பியத்திற்கு முன் பல இலக்கண நூல்களிருந்தன வென்பதற்கு இரண்டு சான்றுகள் தருக.

(ஆ) 1. " எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே "
இதன் பொருளைச் சேனாவரையர் கூறியாங்கு ஆய்க.

2. சொல்லெச்சம் பற்றிச் சேனாவரையர் கொண்ட கருத்தினை விளக்குக.

3. " முன்னத்தி னுணரும் கிளவியும் உளவே "
இதற்கு ஒரு சான்று தந்து விளக்குக.

4. " வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய "
இதன் பொருளை விளக்கி வரைக.

5. உரிச்சொல் பற்றிச் சேனாவரையர் கொண்ட கருத்தினை விளக்குக.

(இ) 1. களவு வெளிப்படும் நிலையை விளக்கி வரைக.

2. விரிச்சி, மன்னைக்காஞ்சி பற்றிய விளக்கங்களைத் தருக.

3. உள்ளுறை யுவமத்துக்கும் இறைச்சிக்குமுரிய வேறுபாட்டினை விளக்கி வரைக.

4. தோழிக்குரிய சிறப்புநிலை அகப்பொருளில் எவ்வாறு விளக்கப்பெறுகிறது ?

5. நகை, அழுகை, பெருமிதம் ஆகிய மூன்றும் எவற்றினடிப்படையாகப் பிறக்கும் என்பதை விளக்கி வரைக.

(ஈ) 1. வாக்கியப் பொருளுணர்விற்குக் காரணங்கள் யாவை என்பதனை விளக்கி வரைக.

2. அழிவுபாட்டபாவம் பற்றி விளக்குக.

3. சங்கை, காலம் பற்றிய விளக்கத்தினைத் தருக.

4. " மங்கலம் இனிது முடிதற்குக் காரணமன்று "
இதனால் ஆசிரியரின் கருத்து யாது என்பதனை விளக்குக.

5. தருக்கஞானம் வீடு பேறடைதற் கேதுவாமாறு யாங்ஙனம் என்பதை விளக்குக.

இலக்கியம்

காலம்: 3 மணி] [மதிப்பெண் : 100

(வினாக்கள் ஒத்த மதிப்பெண்களுடையன)

(அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக

1. திருநாவுக்கரசர் வரலாற்றில் அப்பூதியடிகள் பெறும் இடத்தைப் பெரியபுராணம் வழிநின்று மதிப்பிடுக.

2. கீழ்க்காணும் பதிகங்கள் எழுந்த சூழ்நிலையை வேண்டிய விளக்கந் தந்து விரிக்க:

அ. "சொற்றுணை வேதியன் சோதிவானவன்..."
ஆ. "பண்ணினேர் மொழி யாளுமை பங்கரோ..."
இ. "பாட வடியார் பரவக் கண்டேன்..."

3. மருணீக்கியார், தருமசேனர், நாவுக்கரசர், அப்பர் இப்பெயர்களை இட்டாரையும், இடப்பெற்ற சூழலையும் விளக்கி எழுதுக.

4. "அரனடிக்கு அடிமை பூண்டார்
ஆளும் மன்னனுக்கும் அஞ்சார்"

இக்கருத்தை அப்பர் புராணத் துணையுடன் நிறுவுக.

5. சிறு குறிப்பெழுதுக:

அ. நமிநந்தியடிகள்.
ஆ. திருவாரூர்.
இ. திருத்தாண்டகம்.
ஈ. குணபரவீச்சரம்.

(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக:

1. திருக்கோலக்கா, திருமயிலாப்பூர், திருவாவடுதுறை இம்மூன்றிடங்களிலும் ஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்களைப் பதிகங்களுடன் சுட்டி, அகச்சான்று கொண்டு விளக்குக.

2. திருவைந்தெழுத்தின் அளப்பரும் பெருமைகளை நமச்சிவாயத் திருப்பதிகத் துணைகொண்டு தொகுத்தெழுதுக.

3. "மிகுசைவத் துறை விளங்க" வந்தவதாரஞ் செய்தவர் திருஞானசம்பந்தப் பெருந்தகை என்பதை எங்ஙனம் நிறுவ வல்லீர்?

4. இயற்கை அழகினைப் புனைவதில் திருஞானசம்பந்தருக்கிருந்த பேரீடுபாட்டை அவர்தம் தேவாரப் பாடல் கொண்டு அழகுற விளக்குக.

5. சிறு குறிப்பெழுதுக:

அ. திருப்பாசுரம்.

ஆ. யாழ்மூரி.

இ. க்ஷேத்திரக் கோவை.

ஈ. கொச்சைவயம்.

(இ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக:

1. "ஏதவனைப்பாடும் பரிசு"
"கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை"

இவ்விரு தொடர்களையும் இடஞ்சுட்டி விரித்து வேண்டிய விளக்கம் தருக.

2. மணிவாசகர் அருளிய திருவுந்தியார் துணைகொண்டு சிவபெருமானின் வெற்றிச் சிறப்புக்களைத் தொடுக்க.

3. "உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானல் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே"

இத்திருப்பாட்டின் பொருள் விரித்து நயவுரை தந்து, 'திருவைந்தெழுத்தின் பேதங்களை இதன்கண் குழூஉக் குறியாக ஆசிரியர் ஆண்டுள்ளார்' என்ற கருத்தை நிறுவுக.

4. 'திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்ற கருத்தை ஓர் அரிய பாடற்றுணை கொண்டு எழிலுற விளக்குக.

5. மணிவாசகத்தின் உவமைத்திறம், பழமொழி ஆட்சி இவைகளை மேற்கோள் காட்டி விளக்குக.

(ஈ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடைதருக:

1. திருவீழிமிழலை வீற்றிருந்த கொற்றவனைக் கண்டு கண்ணும், உள்ளமும் குளிரப் பெற்ற சேந்தனார் இறைவனை எங்ஙனம் விதப்பர் ?

2. "களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறு வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே"

இத்திருவிசைப்பாவின் பொருளை விரித்து, இதன்கண் பேசப் பெறும் வரலாற்றைத் தருக.

3. திருப்பல்லாண்டின் வழிநின்று திருமால், பிரமன் இவர்கட்குச் சிவபெருமான் அருள்புரிந்த திறத்தைத் தொகுத்திடுக.

சாத்திரம்

காலம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு:—ஒவ்வொரு வினாவிலும் எவையேனும் இரண்டு உட்பிரிவுகளை நீக்குக.

(அ) 1. "ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல்"

இவ்வுவமையைப் பொருளொடு பொருத்திக் காட்டுக.

2. "அவனவளது" என்னும் சூத்திரத்துள் அமைந்த அதிகரணங்களிற்போந்த பொருளைத் தொகுத்தெழுதுக.

3. 'இலது என்றலின் ஆன்மா உளது' எனக் கூறியது எவ்வாறு பொருந்தும்? விளக்கமாக விடை தருக.

4. "ஐம்புல வேடரின்" என்ற சூத்திரத்துட் குறிப்பாக அமைந்த உருவகங்களை வெளிப்பட விரித்து, அவ்வுருவகங்கள் பொருந்துமாற்றை விளக்குக.

5. "காணும் கண்ணுக்கு," "செம்மலர் நோன்றாள்" என்னும் சூத்திரங்களுள் ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல் என்பவற்றின் செயற்பாடுகள் அமைந்தவாற்றைப் புலப் படுத்துக. 21

6. பின்வரும் தொடர்கட்குப் பொருள் எழுதுக:—

(அ) "அவையே தானேயாய்"

(ஆ) "இருதிறன் அல்லது சிவசத் தாம்என
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே"

(இ) "இருதிறன் அறிவுள திரண்டலா ஆன்மா" 6

(ஆ) 1. அனுமான அளவையிற் சொல்லப்படும் மூன்று ஏது, மூன்று பக்கம், தொகைஆர் உறுப்பு ஐந்து இவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2. "சார்பினில் தோன்றும் எல்லாம்; தருபவன் இல்லை
ஒரு பொருள் ஒருவன் இன்றி உளதில தாகும்"

இவை யார் யார் கூறுவன? இக்கூற்றுக்கள் எங்ஙனம் மறுக்கப்படுகின்றன?

3. "இதம் அகிதங்கள் எல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டு, இங்கு இதம் அகிதத்தால் இன்பத்துன்பங்கள் ஈவன்" என்பது பற்றி நிகழும் தடை விடைகளை யெல்லாம் தருக.

4. மாயையின் இலக்கணத்தினைச் சிவஞான சித்தி எங்ஙனம் வகுத்துரைக்கின்றது? அங்ஙனம் வகுத்துரைக்கக் காரணம் என்ன?

5. "ஆன்மா நிச்சயம் புருடனாகிப் பொதுமையின் நிற்பன்"—எப்பொழுது? விடை விளக்கமாக வேண்டும்.

6. "ஈரிரண்டாம் கிளக்கில் ஞானம்" ஈரிரண்டு எவை? அவற்றுள் எந்த இரண்டிலேனும் நிகழும் அனுபவங்களைக் கூறுக. 28

7. பின்வரும் உவமைகளால் விளக்கப்படும் பொருள்கள் யாவை?

(அ) 'மயிலின் அண்டம் தரித்திடும் சலமேபோல'

(ஆ) 'மேலைக்கு வித்துமாகி விளைந்தவை பயனுமாகி
ஞாலத்து வருமாபோல" 5

(இ) 1. "சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்க லுற்றாம்" என்ற இடத்தில சைவசித்தாந்தத்தின் சிறப்பு எங்ஙனம் விளக்கப்படுகின்றது?

2. அனந்த தேவரால் தோன்றும் தத்துவங்கள் எவை? உருத்திரரால் தோன்றும் தத்துவங்கள் எவை? அவற்றின் தோற்ற முறைகளைக் கூறுக.

3. கன்ம மலம் பற்றிச் சிவப்பிரகாசம் கூறுவன வற்றைத் தொகுக்க.

4. ஆன்ம இலக்கணத்தைச் சிவப்பிரகாச நூல் எங்ஙனம் விளக்குகின்றது?

5. திருவைந்தெழுத்தின் முறைமைகளாக உமாபதி சிவாசாரியர் அருளுவன யாவை? 21

(ஈ) 1. சங்கற்ப நிராகரண நூல் தோன்றிய வரலாற்றையும், காலத்தையும் அகச்சான்று கொண்டு கூறுக.

2. பல மணிகளில் ஒரு நூல் நிற்றல், பல பசுக்களில் பால் ஒரு தன்மைத்தாதல், கனவில் நீங்கும், கயிற்றில் அரவும் பொய்யாய்த் தோன்றுதல்—இவை யாரால், எவற்றுக்கு உவமைகளாகச் சொல்லப்பட்டன? அவ்வுவமை பொருத்தமற்றனவாதலை விளக்குக.

3. “பதிபசு பாசம் விதிமுறை கிளக்கின்,
ஈசன் ஏகன்; எண்ணிலி பசுக்கள்;
பாசம் இருவகைப் பரிசின தலகத்
தாயவன் உயிர்க்கு, மாயையின், அருளால்
இருவினைத் தொகையின், உருவினைத் தரும்”

இஃது எந்த வாதியின் சங்கற்பம்? இதன் பொருளும், நிராகரணமும் கூறுக.

4. சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்தது, சம்பந்தரது திருக்கூட்டத்து அடியவர் புத்தன் தலையில் இடிவிழச் செய்தது இவ்வரலாறுகள் சங்கற்ப நிராகரணத்துள் குறிக்கப்பட்ட இடங்கள் எவை? அவற்றால் விளங்கும் உண்மை பற்றி ஆராய்க. 14

5. பின்வரும் தொடர்களை இடஞ்சுட்டி விளக்குக:—

(அ) ‘அருள்உரு மாயா இருளின தாங்கொல்’

(ஆ) ‘நின்சித் தாந்தம் அவசித் தாந்தம்’ 5

உரை நடை

காலம் : 3 மணி] [மதிப்பெண் : 100

(வினாக்கள் ஒத்த மதிப்பெண் உடையவை)

கீழ்வரும் வினாக்களுள் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை தருக.

1. உயிர்களிடத்து அருளிரக்கம் உடையவர்களாக நாம் வாழவேண்டும் என்பதற்கு அடிகள் காட்டும் காரணங்களைத் தொகுத்தெழுக.

2. "இறைவனை உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடுதலினும் அருவமாய்க் கொண்டு வழிபடுதலே சிறந்ததாம்"—இக் கூற்றினை ஆராய்க.

3. இறைவன் 'உலகெலாமாகி வேருய் உடனுமாய் நிற்பன்' என்பதைத் தடைவிடைகளால் நிறுவுக.

4. ஆன்ம இலக்கணத்தை ஆசிரியர் வழிநின்று விளக்குக.

5. உயிர்கள் அரன்பணி நிற்க வேண்டியதன் இன்றியமையாமை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

6. சிதம்பரத்தினது மாட்சியைப் பற்றி நாவலர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

7. 'சிவனது திருவருள் இல்வழி உண்மை நெறி கூடாதென்பதற்கு மருணீக்கியாரின் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டாகும்'—இக்கருத்தினைத் தெளிவுறுத்துக.

8. 'அடிசேர் முத்தி' எனப்படும் சித்தாந்தக் கோட்பாடு திருக்குறளில் இடம் பெற்றிருப்பதை நான்கு சான்றுகள் தந்து நிறுவுக.

9. 'ஒழுக்க நெறியின் கனிந்த நிலையே வீட்டு நெறியாம்' எனும் கருத்தினைத் திருக்குறள் வழிநின்று விளக்குக.

———

இளஞ் சைவப்புலவர் தேர்வு

இலக்கணம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—எல்லா வினக்களுக்கும் மதிப்பெண் சமம். ஒவ்வொரு வினவிலும் ஒரு உட்பிரிவை விட்டுவிடுக.

1. (அ) நூலுக்கு உரிய அழகுகள் எவை? இவற்றை நன்னூலார் விளக்குமாறு எழுதுக.

(ஆ) இடுகுறி, காரணப் பெயர்களை உதாரணத்தோடு விளக்குக.

(இ) ஒற்றளபெடை யாவன யாவை? அவற்றின் தொகை எவ்வளவு? விளக்குக.

(ஈ) உயர்திணையில் பால் பொதுவாய் வரும் பெயர் யாது? விளக்குக.

(உ) ஆகுபெயர் ஆவன யாவை? அவை எத்தனை வகைப் படும்?

2. (அ) அன்மொழித் தொகைக்கும் அடையடுத்த ஆகு பெயருக்கும் வேறுபாடு யாதோ? அதனை விளக்குக.

(ஆ) மூன்றும் வேற்றுமை உருபுகளையும் அதன் பொருளை யும் விளக்குக.

(இ) பெயரெச்சங்களாவன யாவை? உதாரணத்தோடு விளக்குக.

(ஈ) தொகாநிலைத் தொடர் மொழிகள் என்பன யாவை? அவற்றை விளக்குக.

(உ) பின்வருவனவற்றிற்குப் புணர்ச்சி விதி யெழுதி விளக்குக:—கதவழகிது, புள்ளுக்கடிது, சிவைக் கியம், மகத்துக்கை, வேடீயன்.

3. (அ) இருவகை யசைகளை உதாரணத்தோடு விளக்குக.

(ஆ) மூவகைச் சீர் வாய்பாடுகளை எழுதுக.

(இ) வஞ்சித்தளை, கலித்தளை - இவற்றை விளக்குக.

(ஈ) ஐவகையடிகளின் இலக்கணத்தை விளக்குக.

(உ) சிறு குறிப்பெழுதுக:—கீழ்க்கதுவாய், செந்தொடை, அந்தாதி.

4. (அ) நேரிசை வெண்பாவின் இலக்கணத்தை விளக்குக.

(ஆ) வஞ்சித்தாழிசையின் இயல்பினை விளக்குக.

(இ) பின்வரும் பாடல் எப்பா வகையினைச் சார்ந்ததென் பதனைக் காரணத்தோடு விளக்குக.

“ வென்றான் வினையின் றொகையாங் விரிந்துதன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின்னொளி யாதுமுற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தியாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கினின்றார்.”

(ஈ) தண்டியாசிரியர் கருத்துப்படிச் செய்யுள் வகையினை விளக்குக.

(உ) தண்டியலங்காரத்தில் பெருங்காப்பிய இலக்கணம் எவ்வாறு பேசப்பெற்றுள்ளது ?

5. (அ) உருவக அணியின் பொது விலக்கணத்தை விளக்குக.

(ஆ) பின்வரு நிலையணியின் உட்பிரிவுகளை விளக்கி யெழுதுக.

(இ) ஏதுவணியின் இயல்பினையும் அதன் உட்பிரிவுகளை யும் விளக்குக.

(ஈ) சமாகிதவணியின் இலக்கணத்தை எழுதுக.

(உ) பின்வரும் பாடலில் அமைந்துள்ள அணியினைக் குறிப்பிடுக.

காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.

———

இலக்கியம்

காலம் : 3 மணி] [மதிப்பெண் : 100

(அ) கீழ்வருவனவற்றுள் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக 40

1. திருச்சீரலைவாயில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப்பெருமானின் தோற்றத்தினை நக்கீரர் எங்ஙனம் வருணித்துள்ளார்?

2. வள்ளுவர் வகுத்த வண்ணம் புறப்பற்றினையும் அகப்பற்றினையும் எங்ஙனம் விடுதல் வேண்டும்?

3. பொருட்குக் காரணமாகிய ஊழின் வன்மையினைப் புலப்படுத்துக.

4. குமரகுருபரர் முருகப் பெருமானை வேண்டிய வரங்கள் யாவை?

5. அருணகிரிநாதர் தம் மனத்திற்கும் உலகமக்களுக்கும் கூறும் அறவுரைகளைக் குறிப்பிடுக.

6. சுந்தரர் வரலாற்றினை அறிதற்கு அகச்சான்றுகளாக அமைந்துள்ள அவரது பாடல்களில் எவையேனும் நான்கினை எடுத்துக் காட்டுக.

(ஆ) கீழ்வருவனவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 30

1. திருப்பரங்குன்றத்தில் விளங்கிய சூரர மகளிரின் இயல்பினைப் புலப்படுத்துக.

2. "மெய்யுணர்தல்" என்ற தலைப்பில் வந்துள்ள திருக்குறள் கருத்துக்களைத் தொகுத்து வரைக.

3. சுந்தரர் திருக்குறளைப் பின்பற்றியதற்கு இரு சான்றுகள் தருக.

4. ஆறுமுகப் பெருமானின் திருமுகங்களின் செயல்கள் கந்தர் கலிவெண்பாவில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன ?

5. அருணகிரியார் தாம் பக்குவம் அடையவில்லை என நினைந்து எவ்வாறு வருந்துகின்றார் ?

6. சுந்தரர் தம் திருப்பாடல்களில் குறிப்பிட்ட நாயன்மார்களுள் எவரேனும் இருவர் வரலாற்றினைச் சுருக்கி எழுதுக.

(இ) கீழ்வருவனவற்றுள் யாதானும் ஒன்றிற்குப்பரிமேலழகர் கூறியுள்ள விளக்கவுரையினை வரைக:— 6

1. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

2. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.

(ஈ) கீழ்வரும் உவமைகளுள் எவையேனும் மூன்று எவைகளை விளக்க வந்தன? உவமப் பொருத்தத்தினையும் குறிப்பிடுக:— 9

1. கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி.
2. புல்நுனைப்பனி வெங்கதிர் காணல்.
3. மருந்தாகித் தப்பா மரம்.
4. வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தல்.
5. இளம்பரிதி நூறுயிரங் கோடி.

(உ) கீழ்வருவனவற்றுள் மூன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் நயத்தினையும் புலப்படுத்துக:— 15

1. இன்னே பெறுதி நீ முன்னிய வினையே.
2. மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்.
3. சைவக் கொழுந்தே ! தவக்கடலே !
4. ஐயோ அடியேன் அலையத் தகுமோ ?
5. இவ்வழி போந்த அதிசயம் அறியேனே ?

சாத்திரம்

மதிப்பெண் : 100] [காலம் : மூன்று மணி

குறிப்பு :—எல்லா வினாக்களும் ஒத்த மதிப்பெண் உடையன. எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. திருவுந்தியாரில் வரும் சில அழகிய தொடர்களைக் குறிப்பிட்டு, அவற்றின் பொருளையும் எழுதுக.

2. ஞானாசிரியரின் பெருமை (அல்லது) சரியை கிரியை யோகங்களின் சிறப்பு, திருவுந்தியாரில் எவ்வாறு விளக்கப் பட்டுள்ளது ?

3. வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர் யார் ? அவர்கட்கு எறிய பித்து எது ? தெளிவுறுத்துக.

4. திருவுந்தியாரைத் தழுவியே திருக்களிற்றுப்படியார் இயற்றப் பெற்றது என்பதற்கு ஒரு சான்று தருக.

5. திருக்களிற்றுப் படியார் ஆசிரியர் சிவசத்திகளின் இயல்பினை எங்ஙனம் விளக்கியுள்ளார் ?

6. திருக்கடவூர் உய்யவந்த தேவர் பெரிய புராண வரலாறுகளில் மிகவும் ஈடுபாடுடையவர் என்பதற்குச் சான்று தருக.

7. 'உயிரவை நிலை' (அல்லது) 'உயிர் விளக்கம்' என்னும் தலைப்பில் திருவருட்பயன் விளக்கும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

8 திருவைந்தெழுத்தைப் பற்றித் திருவருட் பயன் கூறுவன யாவை ? விளக்குக.

9. திருவருட்பயனிற் போந்துள்ள உவமைகளுள் எவையேனும் இரண்டினைச் சுட்டி விளக்குக.

10. மனவாசகம் கடந்தார் வித்தியா தத்துவங்களின் பெயரையும் இயலையும் எங்ஙனம் விளக்கியுள்ளார் ?

11. முத்திதனை அடைந்தோர் நிலக்குக் கூறப் பெறும் உவமைகள் யாவை ?

12. முத்தித்தலைவர் யார் ? அவர்தம் செயல் யாது?

13. "அருவேல் உருவன் றருவேல் அருவன்
நிருவேறும் ஒன்றிற் கிடையா"

எனக் கூறி நிகழ்த்தும் வினுவுக்குரியவிடை யாது ?

14. "பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியே திரவேது"

என்னும் செய்யுட் பொருளைத் தெளிவுறுத்துக.

உரைநடை

காலம் : 3 மணி] மதிப்பெண் : 100

குறிப்பு: (1) வினக்கள் ஒத்த மதிப்பெண்களுடையன :
(2) விடைகள் கட்டுரை வடிவில் இரண்டு பக்க அள வில் அமைதல் வேண்டும்.

1. 'ஒருநம்பி அப்பூதி' தம் அருள் வரலாற்றினைப் பெரிய புராணம் வழிநின்று, நாவலர் நடையழகில் எழுதுக.

அல்லது,

திருநின்ற சருக்கத்தில் இடம் பெற்ற தனியடியார்களைச் சுட்டி அவருள் ஒருவர் தம் வரலாற்றை இனிதெடுத்தெழுதுக.

2. தருமிக்கு அருளிய சிவபெருமானின் பெருங்கருணைத் திறத்தைத் திருவிளையாடல் வழிநின்று மதிப்பிடுக.

அல்லது,

"மனித உயிர்கட்கன்றி அனைத்துயிர்கட்கும் அருள் பாலிப்பதே திருவிளையாடலின் உட்கோள்" என்பதைத் தக்க சான்று கொண்டு நிறுவுக.

3. தாயுமானுர் பாடல்களில் காணக்கிடக்கும் பேரன்பின் இயல்பினை திரு. கா. சு. பிள்ளையவர்கள் எங்ஙனம் விளக்குவர் ?

அல்லது,

தாயுமானுர் வரலாற்றில் நிகழ்ந்த அருள்வெளிப்பாட்டை விளக்கும் அற்புத நிகழ்ச்சிகளைத் தொகுத்திடுக.

4. சைவ சமயத்திற் காணப்படும் சமரச இயல்பு பற்றித் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் உட்கோளை விளக்குக.

அல்லது,

'சமயம்' என்ற சொல் விளக்கும் உண்மைப் பொருள் பற்றிய ஆய்வை நும் மதிப்பீட்டுடன் எழுதிக் காட்டுக.

5. அப்பரடிகள் சைவம் மீண்ட வரலாற்றினைத் தக்க அகச்சான்று கொண்டு நிலை நாட்டுக.

அல்லது,

சிவக்கவிமணி அவர்கள் தம் ஆராய்ச்சியாற் சுட்டும் புதிய முடிபுகள் சிலவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரை புனைக.

———

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை—ஆயுள் உறுப்பினர்

5380 N. ஜயராமன்,
"குமாரகுரு இல்லம்,"
2, புஷ்பாவதி அம்மாள் தெரு,
மேலை மாம்பலம், சென்னை-33

5394 வி. திருநாவுக்கரசு,
அசிஸ்டன்ட்,
ரெவினியூ டிபார்ட்மென்ட்,
அரசினர் தலைமைச் செயலகம்
சென்னை-9

5416 தாரா. நடராசன், எம்.பி., பி.எஸ்.
10, பெசன்ட் ரோடு
இராயப்பேட்டை, சென்னை-14

5420 பேராசிரியர் -
அ. மு. பரமசிவானந்தம்,
எம்.எ., எம்.லிட்.,
"தமிழ்க்கலை இல்லம்"
அய்யாவு நாயுடு தெரு,
சென்னை-30

2154 R. மாசிலாமணி முதலியார்
1/1, டி'சில்வா ரோடு
மயிலாப்பூர், சென்னை-4

4828 K. L. பழனிசாமி,
2, ஐந்தாவது குறுக்குத் தெரு,
டிரஸ்ட் புரம், சென்னை-24

4982 சி. வடிவேல் பிள்ளை,
85, வேளாள தெரு
புலியூர், சென்னை-24

2106 K. E. அருணாசலம், எம்.எ.,
பி.காம்.,
6, வாசு தெரு, கீழ்ப்பாக்கம்,
சென்னை-10

3799 M. R. சம்பந்தம்,
C/o. R. தாசன் ஸ்டுடியோ,
1/48, ரட்டன் பஜார்,
சென்னை-3

5364 S. திருநாவுக்கரசு,
9, கனகசபை நகர், சிதம்பரம்
தெ. ஆ. மாவட்டம்

5437 கு. ப. முருகேச முதலியார்,
23-25, வெல்லப்பிறந்தான்
முதலி தெரு, சிதம்பரம்
தெ. ஆ. மாவட்டம்

5435 வை. திருஞானசம்பந்தம்,
சுந்தரவிலாஸ் ஜவுளி,
ஆடுதுறை அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்

2618 சிவ. இராம. அ. நடராச
முதலியார்,
ஜவுளி வியாபாரம்
வடக்கு தெரு,
அம்பா சமுத்திரம்,
திருநெல்வேலி மாவட்டம்

5447 புலவர்-பொன். கணேசனார்,
தமிழாசிரியர், இராசாத் தெரு,
புன்செய் புளியம்பட்டி அஞ்சல்,
கோவை மாவட்டம்

4083 பழ. முருகேசன், ஆசிரியர்,
25, தாகூர் தெரு,
புன்செய் புளியம்பட்டி அஞ்சல்,
கோவை மாவட்டம்

4676 அ. மாரிமுத்து, ஆசிரியர்,
3/68 - அ. கிழமேல் தெரு,
செங்குந்த புரம்,
புன்செய் புளியம்பட்டி அஞ்சல்,
கோவை மாவட்டம்

5452 மு. இளமுருகு, பி.எஸ்சி., பி.டி.
4/114, சவகர்ப் பெருவழி,
புன்செய் புளியம்பட்டி அஞ்சல்,
கோபிவட்டம்,
கோவை மாவட்டம்

5453 சு. பாலகிருட்டிணன், ஆசிரியர்,
நொச்சிக்குட்டை அஞ்சல்
புன்செய்ப் புளியம்பட்டி வழி,
கோபி வட்டம்,
கோவை மாவட்டம்

5293 மூக்கபிள்ளை,
285, பெரிய கடைத்தெரு,
திருச்சி-8

3039 புலவர் - இ. தங்கவேலன்,
தமிழாசிரியர்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
பிக்கட்டி அஞ்சல்
குந்தா வழி, நீலமலை மாவட்டம்

ச மா ஜ வெ ளி யீ டு க ள்

	ரூ.	பைசா.
திருவாசகம் (எட்டாம் திருமுறை)	1	00
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை)	1	00
சமாஜ 63ஆம் ஆண்டு விழா மலர்	1	00
காயசித்தி	1	00
திருமந்திரச் சம்பிரதாயம்	1	00
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவு மலர்	1	00
முருகன் முந்நூல்	0	40
அறுபத்துமூவர்	0	06
வைர விழா மலர்	2	00
அறப்பயிற்சி மாலை	0	50
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு	0	75
பிரதோஷ வழிபாடு	[illegible]	[illegible]
நான் நம்புவன சில	0	10
விநாயகர் வழிபாடு	0	20
கூட்டு வழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி—பொன்விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—எளிய உரை—2ஆம் பதிப்பு	1	00
திருவெம்பாவை—விசேட உரையுடன்	0	75

பாம்பன்—ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

தற்போது கிடைக்கக்கூடியவை:

சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் மூலமும் உரையும்	1	50
செவியறிவுறூஉ	0	20
பாம்பன்-ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	1	50
சிறுநூற்றிரட்டு	1	25
சிவஞான தீபம்	0	50
ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	0	30
சைவ மகிமையும் சுருக்க அனுட்டான விதியும்	0	50
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குரு சீட சம்பவ வரலாற்று வியாசமும்	2	50

சமயங்களைக் குறித்த வியாசம்	1	25
பரிபூரணானந்த போதம்-சிவ சூரியப்பிரகாசம் என்னும் உரையுடன்	6	50

தபால்—ரயில் செலவு தனி.

"சித்தாந்தம்"—சிறந்த மாதப்பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 6 ஆயுள் சந்தா ரூ. 50.

"சைவ சித்தாந்தா"—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

வருந்துகிறோம்

சைவப்புலவர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களின் அருமை இளவலான பண்டித. அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் 15-11-69 மாலை 6 மணிக்கு இவ்வுலகினீங்கினது [illegible] வருந்துகின்றோம். அவர்கள் நம் சமாஜத்தோடு நீண்டகாலத் தொடர்புடையவர்கள். அன்னார் ஆவி எல்லாம் வல்ல ஒப்பற்ற பெருமானிணையடியிலின்புற்றிருக்க அவிநாசியப்பன் அருள் செய்ய அன்னேன் அடியிணைகளை வேண்டி வழுத்துகின்றோம்.

காலம் சென்ற பெரியாரின் இறுதிச் சடங்கை, தவ திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி முதல்வர் இராமசாமி அடிகள், பேராசிரியன்மார் மற்றும் பல்லோரும் முன்னின்று சிறப்பாக நடத்தினது பாராட்டற்குரியது.

பொள்ளாச்சித் தொழிலதிபர், வள்ளல் திரு. N, மகாலிங்கம் அவர்கள் தாயார் திருமதி ருக்மணி அம்மாள் தம் 62ஆவது வயதில் தம் அருமைத் திருமகனை விட்டு இவ்வுலகினீங்கினர்கள் என்பது கேட்டு சமாஜம் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

காலம் சென்ற அம்மையார் அவர்கள் நிரம்பிய தெய்வ சிந்தனையுடையவர்கள். அவர்கள் ஆன்மா எல்லாம் வல்ல பட்டீசப் பெருமான் கழலிணைகளில் தங்கி இன்பந்துய்க்க அப்பெருமானருள் புரிய வேண்டி வணங்குகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.